OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பேர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, (இலங்கை வங்கிக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை (17 - 04 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 140

# உல்லாசப் பயணிகள், முதலீட்டாளருக்கு எல்லாளன் படை கொலைப் பயமுறுத்தல்!

## ஸ்ரீலங்கா பொருளாதாரத்தில் பாதிப்பை உண்டாக்கும் அபாயம்

கொழும்பு, ஏப்ரல் 17

ஸ்ரீலங்காவுக்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது,

தாம் இனிமேல் நடத்தப்போகும் குண்டுத் தாக்குதல்களுக்கு இவர்களே இலக்காக இருப்பர் என்று "எல்லாளன் படை" எச்சரித்துள்ளது.

கொழும்பில் கடந்த வாரத்தில் - எட்டாம், ஒன்பதாம் திகதிகளில் - நடந்த தொடர் குண்டு வெடிப்புகளுக்கு உரிமை கோரியுள்ள "எல்லாளன் படை", உல்லாசப் பயணிகள், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விடுத்த தனது எச்சரிக்கையை பி. பி. ஸிக்கும், கொழும்பில் உள்ள சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கும் தெரியப்படுத்தி உள்ளது:

ஆனால் —

புலிப்படையினரே இந்தத் தாக்குதல்களை நடத்தியதாகக் கூறும் பாதுகாப்புப் படையினர் "எல்லாளன் படை" என்று கூறிக்கொள்ளும் குழுவின் கூற்றை அலட்சியப்படுத்தியிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது;

இது தொடர்பாக பி. பி. ஸியின் கொழும்பு செய்தியாளர் திரு. சியார்ோ நூஸ் தெரிவித்திருப்பதாவது:-

முன்பு எவருமே அறியாத "எல்லாளன் படை", தான் தமிழ் மக்களின் பிரதிநிதி எனக் கூறியுள்ளது,

வரலாற்றுச் சிறப்பு மிக்க இலங்கைத் தமிழ் மன்னன் எல்லாளனின் பெயரை அந்தக் குழு வைத்திருக்கிறது.

உல்லாசப் பயணிகளுக்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் எதிராக விடுக்கப்பட்டிருக்கும் இந்த எச்சரிக்கை நாட்டுக்குப் பாதகமான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

### புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்

அத்துடன் இந்த மிரட்டல் உண்மையாக இருந்தால், வடக்கு- கிழக்கு இனப்போரில் அது ஓர் புதிய திருப்பத்தையும் ஏற்படுத்தக் கூடும்.

அந்தக் குழுவின் பிரதிநிதி எனத் தன்னைக் கூறிக்கொண்ட ஒருவர், தொலை

(5ஆம் பக்கம் பார்க்க)

## கோமாரியிலிருந்து பொருள்கள் இறக்கும் வேலை

பருத்தித்துறை துறைமுகத்தில் கோமாரி கப்பலிலிருந்து மட்டுமே நேற்று பொருள்கள் இறக்கப்பட்டன.

கோமாரியிலிருந்து பொருள்கள் விரைவாக இறக்கி முடிக்கப்படவேண்டும் என்பதற்காக மாஹோ, றுகுணு கப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சோனியா காந்தியின் திண்டுக்கல் விஜயம் ரத்து

### புலிகள் தாக்கலாம் என அச்சமாம்

சென்னை, ஏப். 17

தமிழ்நாடு திண்டுக்கல்லுக்கு சோனியா காந்தி மேற்கொள்ளவிருந்த விஜயம் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக காரணம் காட்டி ரத்துச் செய்யப்பட்டதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திரா காங்கிரஸ் எம். பி. ப.சிதம்பரத்தின் அழைப்பின் பேரில் திண்டுக்கல்லுக்கு சோனியா காந்தி விஜயம் செய்யவிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ் காந்தியின் இன்னொரு விசுவாசியும் சிதம்பரத்தின் எதிரியுமான இந்திரா காங்கிரஸ் எம்.பி. ஆர். பிரபு திண்டுக்கலில் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக சோனியாவுக்கு தகவல் அனுப்ப சோனியா தமது திண்டுக்கல் பயணத்தை ரத்து செய்து விட்டார் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

எனினும் — திண்டுக்கலில் அப்படி ஒரு அச்சுறுத்தலும் இல்லை என்று சிதம்பரம் கூறுகிறார்.

இந்திரா காங்கிரசினுள் இருக்கும் உட்கட்சிப் பூசலில் சம்பந்தப்பட்டுள்ளோர் தமது நோக்கங்களை அடைய விடுதலைப் புலிகளின் பெயரையே பயன்படுத்துவதாகவும் —

இதன் காரணமாக சோனியா காந்தியின் பயண ஏற்பாடுகளில் திடீர் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருந்ததாகவும் இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## உதவி லஞ்ச ஆணையாளர்

## ரூ. 1 கோடி நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஏப். 17

ஒருகோடி ரூபாவை நட்டஈடாகக் கோரும் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை உதவி லஞ்ச ஆணையாளரான வி. கே. ஹெட்டியாராச்சி நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார்.

பிரதி நம்பிக்கைப் பொறுப்பாளராகப் பணியாற்றிய என். எஸ். செனவிரத்னாவை பிரதி லஞ்ச ஆணையாளராக நியமித்ததன் மூலம் அரசமைப்பின் 12 (1) பிரிவின் கீழ் உறுதி செய்யப்பட்டிருக்கும் அடிப்படை உரிமை தமக்கு மறுக்கப்பட்டுள்ளதாக திரு. ஹெட்டியாராச்சி தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதி லஞ்ச ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. செனவிரத்னா, தமது நீதித்துறை அதிகாரி பதவியை ராஜினாமாச் செய்யாமல் புதிய பதவியை ஏற்றிருப்பது அரசமைப்பின் 170 ஆவது பிரிவுக்கு முரணானது என்றும்— அம்மனுவில் கூறப்பட்டுள்ளது. (இ-எ-6)

## கொழும்பில் தமிழர் தொடர்ந்து கைது

யாழ்ப்பாணம், ஏப். 17

கடந்த சனிக்கிழமை முதல் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் முப்படையினரும் கூட்டாக நடத்திவரும், தேடுதல் நடவடிக்கைகளில் மேலும் பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 500க்கும் அதிகம் எனக் கூறப்பட்ட போதும் அத்தொகை அதனிலும் அதிகம் எனத் தற்போது வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக வீடுகள், விடுதிகளில் சோதனை நடத்தி தமிழ் இளைஞர், யுவதிகளை கைது செய்து வருகின்றனர்;

இதேவேளை கடற்படையினரும், இராணுவத்தினரும் வீதிகளில் கால்நடையாகச் சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## மாத்தளை மாநகர ஐ. தே. க உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப். 17

ஐக்கிய தேசியக்கட்சியின் நிர்வாகத்தில் உள்ள மாத்தளை மாநகர சபையின் ஐ. தே. க. உறுப்பினர் ரஜ்மல் ஹூசேன் நேற்று முன்தினம் இரவு 7-15 மணியளவில் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுட்டவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக மாத்தளை மாநகர மேயர் ரஞ்சித் அலுவிஹாராவுக்கு ஆதரவான மாநகர சபை உறுப்பினர் எம். ஆர். ஹவுஸ்தீனும் அவரது மகனும் நேற்று முன்தினம் இரவு பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான ஹவுஸ்தீன், கொலை செய்யப்பட்ட ஹூசேனின் வீட்டின் முன்னால் வசித்து வருகின்றார்.

ஹூசைனைச் சுட்ட நபர்கள் இருவரும் கொலை நடைபெறுவதற்கு முன்னர் ஹவுஸதீனின் வீட்டில் காணப்பட்டவர் என்று சம்பவத்தை நேரிற்கண்டவர்கள் தெரிவித்தனர். (இ-எ 6)

## மாத்தளையில் நேற்று கடைகள் அடைப்பு

மாத்தளை மாநகர சபை உறுப்பினர் ஹூசேன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து மாத்தளை நகரில் உள்ள கடைகள் அனைத்தும் நேற்று மூடப்பட்டிருந்தன.

இறந்தவரின் இறுதிச்சடங்கில் பல்லாயிரக் கணக்கான மக்கள் சூழ்ந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவரின் தந்தை மாத்தளை மாநகர மேயராக இரு முறை பணியாற்றியிருந்தார். (இ-எ-6)

## மேயருடனான தகராறே கொலையில் முடிவு?

மாத்தளை மாநகர உறுப்பினர் ஹூசேன் கொலை அரசியல் பின்னணியைக் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

மாத்தளை மாநகர மேயர் ரஞ்சித் அலுவிஹாராவும் அவரது ஆதரவாளர்களான ஆறு மாநகர உறுப்பினர்களும் அண்மையில் தமது பதவிகளை ராஜினாமாச் செய்திருந்தனர்.

தமது நிர்வாகத்துக்கு எதிராக குற்றச் சாட்டுகளை எழுப்பிவரும் இரு மாநகரசபை உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படாததை ஆட்சேபித்து இவர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்திருந்தனர்.

எனினும் சம்பந்தப்பட்ட இரு உறுப்பினர்களையும் ஐ.தே. க பொதுச் செயலாளர் சிறிசேன கூரே இடைநிறுத்தம் செய்ததைத் தொடர்ந்து, மேயரும் அவரது ஆதரவாளர்களும் தங்கள் ராஜினாமாக் கடிதங்களை வாபஸ் பெற்றனர்.

இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட இரு உறுப்பினர்களில் கொல்லப்பட்ட ஹூசேனும் ஒருவர் மற்றவர் வீரக்கோன்.

உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக ஹூசேனும் தாமும் ஜனாதிபதிக்கும் ஐ தே க பொதுச் செயலாளருக்கும் முறையிட்டும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்று திரு. வீரக்கோன் நேற்றுத் தெரிவித்தார். (இ-எ-6)

## வடமராட்சியில் புக்காரா தோட்டம்

வடமராட்சிப் பகுதியில் நேற்றும் தொடர்ந்து விமானப் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

நேற்றுக் காலை 6-15 மணிக்கு வந்த புக்காரா விமானம் காலை 6-45 மணிவரை சுமார் 30 நிமிட நேரம் பருத்தித்துறை முனை, சக்கோவளம் பகுதி முதல் தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை வரையிலான பகுதிகளை உள்ளடக்கி கடற்கரைப் பக்கமாக பல தடவை வட்டமிட்டுச் சென்றது.

# ஆண்டு இறுதியில் வடக்கு கிழக்கில் கூட்டுப்படை நடவடிக்கை

## யாழ், ஆனையிறவு, திருமலை, மணலாறு பிரதான மையங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 17

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இந்த ஆண்டு இறுதியில் கூட்டுப்படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு என இயந்திரமயப்படுத்தப்பட்ட மூன்று விசேட படையணிகள் அமைக்கப்படவுள்ளன.

—சிரேஷ்ட படை அதிகாரிகளை மேற்கோள் காட்டி கொழும்பில் வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்று இத்தகவல்களை வெளியிட்டுள்ளது.

யாழ் குடாநாடு, ஆனையிறவு, திருமலை, மணலாறு ஆகிய பகுதிகளே அந்தத் தாக்குதல நடவடிக்கையின் பிரதான மையங்களாக அமையும் என்றும்—

அந்தப் படை நடவடிக்கைக்காகப் புதாகப் படையணிகள் உருவாக்கப் படுவதால் தற்போதுள்ள இராணுவக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்றும்—

அமைக்கப்படவுள்ள மூன்று விசேட படையணிகளுக்கென தற்போது புதிதாக கவச வாகனங்கள், கடற்படைக் கலங்கள், ஹெலிகள் கொள்வனவு செய்யப்படுகின்றன என்றும்—

இவற்றைக் கொண்டு அந்தப் படையணிகள் இயந்திர மயமாக்கப்படும் என்றும் சிரேஷ்ட படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்படவுள்ள மூன்று விசேட படையணிகளில் இரண்டாவது படையணியின் கட்டளைத் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் எம் எம். யூ.

(5ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதி நினைவாக குடாநாட்டில் உண்ணாவிரதங்கள், கலை நிகழ்ச்சிகள்

## இன்றும் நாளையும் பெரும் அளவில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 17

தியாகி அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி குடாநாட்டில் இன்றும் நாளை திங்கட்கிழமையும் அடையாள உண்ணா விரதங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பன பரவலாக இடம்பெறவுள்ளன.

இன்றும் நாளையும் இடம்பெறவுள்ள நிகழ்வுகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

உண்ணாவிரதம் நடைபெறும் இடங்களில் காலை 7 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றப்படும். பின் சரியாக 7 மணி ஒரு நிமிடமளவில் மலர் மாலை அணிவித்தல் இடம்பெறும். தொடர்ந்து 7 மணி 7 நிமிடமளவில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைக்கும் உரை இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் நினைவு உரைகள் இடம்பெறும்.

இடையே கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். தேசிய எழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்படும்.

பிற்பகல் 4-50 மணிக்கு எல்லா இடங்களிலும் உண்ணாவிரத நிறைவுரையும் தொடர்ந்து பிற்பகல் 5 மணிக்கு நீராகாரம் வழங்கி உண்ணாவிரதத்தை நிறைவு செய்யும் வைபவமும் நடைபெறும்.

யாழ் மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. இளையவன் இந்த விவரங்களை அறிவித்துள்ளார்.

இன்று கோட்ட ரீதியாக வட்டுவைப் பிரிவுகளில் உண்ணாவிரதங்கள் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:-

இன்று

★ நல்லூர் — கொக்குவில் மாத்தளை முருகன் கோவில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி




அப்ப [illegible] என்று [illegible]......!

## தேர்தல் லாபத்துக்காக

# பிரேமா பெயரை பயன்படுத்த ஐ. தே. கவை அனுமதியோம்

### குடும்ப உறுப்பினர் சபதம்

கொழும்பு, ஏப் 17

எதிர்வரும் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் பெயரைப் பயன்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்தை அனுமதிப்பதில்லை என்று பிரேமதாஸாவின் முக்கிய குடும்ப உறுப்பினர் ஒருவர் பிரதிக்ஞை செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸா படுகொலையுண்டதன் பின்னர் கடந்த பத்து மாதகாலமாக அவரது பெயரையும் சேவைகளையும் இருட்டடிப்புச் செய்த பின்னர் இப்போது தேர்தல் லாபம் கருதி அவரது பெயரைப் பயன்படுத்த ஆளும் கட்சி முயற்சி எடுப்பது குறித்து பிரேமதாஸா குடும்பத்தினர் ஆத்திரம் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக தென் மாகாணசபைத் தேர்தல் தோல்வியை அடுத்த ஆளும் கட்சி பிரேமதாஸா குடும்பத்தினரின் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டிய நிலையில் இருப்பதாக "சண்டே டைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது.

பிரேமதாஸா மறைவை அடுத்து அவரின் நினைவாக 7ஆம் நாளிலும் 3ஆம் மாத முடிவிலும் நடத்தப்பட்ட சமய நிகழ்ச்சிகளுக்கு வானொலியும் டெலிவிஷனும் முக்கியத்துவம் அளிக்காததையும்—

சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கு ஹேமாவை அழைக்காததையும் அவரது குடும்பத்தினர் மறந்து விடமாட்டார்கள் என்றும் அந்த முக்கிய குடும்ப உறுப்பினர் கூறியுள்ளார். (எ)

# கட்சிக் கூட்டங்களில் வாய்மூடி மௌனிகளாக உள்ளோம்

### அமைச்சர் மெண்டிஸ் கூறுகிறார்

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொள்கைகளை மறந்ததினால் தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போதைய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அரசாங்கக் கட்சிக் கூட்டங்களில் அனைவரும் வாய்மூடி மௌனிகளாக உள்ளனர்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜேபால மெண்டிஸ் பலப்பிட்டியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

"நடந்து முடிந்த தென் மாகாணசபைத் தேர்தல் கூட்டங்களில் நான் ஒருவன் மட்டுமே பிரேமதாஸாவின் பணிகள் பற்றிப் பேசினேன்.

கட்சியில் உள்ள எவரும் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. எவருக்கும் நான் பந்தம் பிடிக்கமாட்டேன். கட்சியின் கொள்கை, நோக்கம் முதலானவற்றை நான் பாதுகாக்கின்றேன். நான் புளுகமாட்டேன்" — என்றும் அவர் கூறினார். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆரம்பம்

96 A/L

புதிய பிரிவு

BOTANY — திரு. V. S குணசீலன் B. Sc (Special)

Sat & Sun - 2 00 மணி

PHYSICS — திரு. S. கணேசன் B. Sc. (Eng)

Sat. & Sun - 6-00 மணி

ஆரம்பம்: 17 - 04 - 1994 (Sunday)

NEW SCIENCE ACADEMY
KANNATHIDDY ROAD, JAFFNA.

(சி/8015)



சுன்னாகம்

ஸ்ரீ சந்திர சேகர விநாயகர் தேவஸ்தான

பிரம்மோற்சவம்

கொடியேற்றம்
16 — 04 — 1994 சனி பகல் 11 மணி
வசந்தோற்சவம்
21 — 04 — 1994 வியாழன் மாலை 6 மணி
சப்பர் றோற்சவசவம்
23 — 04 — 1994 சனி மாலை 6 மணி
தேர்
24 — 04 — 1994 ஞாயிறு பகல் 10 மணி
தீர்த்தோற்சவம்
25 — 04 — 1994 திங்கள் காலை 9 மணி
பூங்காவனம்
26 — 04 — 1994 செவ்வாய் மாலை 5 மணி

மஹோற்சவ பிரதமகுரு கிரியா
கலாப முக்தாமணி
ச. தேவராஜா குருக்கள்
[அல்வாய்]

உபந்நியாசம்
"அருள் மொழியரசு"
ஆறு. திருமுருகன் (கம்பன் கழக பேச்சாளர்)
விடயம்:
"விநாயக புராணம்"
நேரம் இரவு 8-00 மணி — 9-00 மணி

பாடசாலை மாணவர்களுக்கு உபந்நியாசத்தில் இருந்து மூன்று பிரிவாக பரீட்சை நடைபெறும். அத்துடன் பரிசில்களும் வழங்கப்படும்.

விளம்பர அன்பளிப்பு:
சக்தி மருந்தகம்
சுன்னாகம்.

(சி-2084)



அன்னை பூபதி நினைவு நாள்
6ஆம் ஆண்டு

இடம்: நல்லூர் கந்தசாமியார் கோயில் முன்றிலில்
காலம்: 18 - 04 - 1994
திங்கள் மாலை 5-30 மணி

நிகழ்ச்சி நிரல்
1. மௌன அஞ்சலி
2. தமிழ் தாய் வணக்கம்
3. தலைவர் உரை
4. விடுதலைப் புலிகள் முக்கிய பிரமுகர்கள் உரை
5. இன்னிசை
6. நடனம்
7. பட்டி மண்டபம்

தமிழீழம் மீதான பிரதான ஆக்கிரமிப்பாளர்கள் இந்தியாவா? இலங்கையா?

நடுவர்: திரு. அ குமாரவேல்

| இந்தியா | இலங்கை |
|---|---|
| திரு. வரதராஜன் | திரு. இரா. செல்வவடிவேல் |
| திரு. கணேசலிங்கம் | திரு. காரை. செங்கா |
| திரு. மகேந்திரம் | திரு. சிறீதரன் |

8. நன்றியுரை

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

[சி-7782]



கண்ணீர் அஞ்சலி

செல்வி இந்துமதி நாகலிங்கம்
(இ. நி. சே)
(பிரதேசச் செயலாளரும் விசேட ஆணையாளரும், கரைச்சி கிளிநொச்சி)

அன்னாரின் மறைவு குறித்து எமது அதிர்ச்சியின் மத்தியில் ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினருக்கும் அவரது செயலக உத்தியோகத்தர்களுக்கும், பிரிவால் துயருறும் பொது மக்களுக்கும் இதய பூர்வமாகத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேசச் செயலகம்,
கண்டாவளை.

(30438)



மல்லாகம், நீலியம்பனை

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான
உற்சவ மூர்த்திப் பிரதிஷ்ட
மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான பவ வருஷம் சித்திரை மாதம் 5 ஆம் திகதி (18-04-94) திங்கட்கிழமை சப்தமித்திதியும் புனர்பூச நட்சத்திரமும் அமிர்த சித்தயோக யோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் 9 மணி 47 நிமிடம் தொடக்கம் 11 மணி 46 நிமிடம் வரை வரும் மிதுன லக்கினத்தில் மகா கும்பாபிஷேக விஞ்ஞானம் சகல கிரியா கலாபங்களுடன் மிக சிறப்பாக நடைபெறும்.

அம்பாள் அடியார்கள் வந்து தரிசித்து திருவருளை பெற்று ஏகுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

பிரதிஷ்ட குரு
பிரதிஷ்டாகிரியாஞான சாகரம்
சிவஸ்ரீ பாலவைத்தியநாத சிவாச்சாரியாரின்
[ஊரெழு] தலைமையில் நடைபெறும்

இங்ஙனம்,
தேவஸ்தானம்

(7074)



உ
ஸ்ரீ ராம ஜெயம்
யாழ். வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

ஸ்ரீ சுதர்சன சக்கர வழிபாடும்
ஸ்ரீ இராமானுஜர் ஜெயந்தியும்

எம்பரத் தரனொ ரொடும் கூடலன்
உம்பர் வாழ்வை யொன்றாகக் கருதிலன்
தம்பிரா னமரர்க்கு – அரங்க நகர்
எம்பி ரானுக் கெழுமையும் பித்தனே.

நிகழும் பவ வருடம் சித்திரைத் திங்கள் 4 ஆம் திகதி (17-04 94) ஞாயிற்றுக்கிழமையும், திருவாதிரை நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் காலை 7-00 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் ஸ்ரீ தேவி பூமிதேவி சமேத ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கும் ஸ்ரீ ராமானுஜ ஆச்சாரியாருக்கும் நவகலச ஆராதனையும் புருஷசூக்த பாராயணமும் ஸ்ரீ சுதர்சன ஹோமமும் நடைபெற்று, அபிஷேகத் திருமஞ்சனமும் தீபாராதனையும் பக்தர்களுக்கு அருட்பிரசாதம் வழங்குதலும் நடைபெறவிருப்பதால் அடியார்கள் யாவரும் இப்பெருவிழாவில் பங்குபற்றி ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் பேரருள் பெறக்கடவீர்களாக.

இன்று காலை 7 மணிக்கு ஸ்நபன பூஜை ஆரம்பம், தொடர்ந்து சுதர்சன ஹோமமும் நடைபெறும். இதன் பின் ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் உள்வீதி வலம் வருவார்.

விசேட மங்கள வாத்தியம்

நாதஸ்வர வித்துவான்
N K பத்மநாதன் குழுவினர்
நாதஸ்வர வித்துவான்
V.K பஞ்சமூர்த்தி

விசேட தவில் வித்துவான்
நாச்சிமார் கோவிலடி K. சிவகுமார்

இங்ஙனம்
யாழ். வண்ணை
ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள்
தேவஸ்தான ஆதீன மகா சபை

(30445)



வைத்திய சேவை

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? தொய்வு வியாதியா? நீரிழிவா? சருமரோகமா? மலேரியாவா? உடல் பருமனா? உடல் மெலிவா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? குழந்தைகளின் ரோகங்களா? மாதர்களின் ரோகங்களா சிறந்த சிகிச்சையும், உரிய ஆலோசனையும் அளிக்கப்படும் —

தினமும் — காலை 8-30 — 12-30
பி. ப. 3-00 — 6-00

டாக்டர். த. சிவானந்தன்

"சிவா வைத்திய நிலையம்"
384, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு,
(முடமாவடிச் சந்தி)

(30447)



ஓம்
ஸ்ரீ ராம ஜெயம் திருச்செந்தில் முருகன் துணை

விவாக சோபனம்

| | | |
|---|---|---|
| மலேசியா கோலாலம்பூர், ஸ்கொட் றோட், கந்தசாமி கோவில் முன்னாள் பிரதம குருக்கள், சோமாஸ்கந்த குருக்களின் பேரனும் சண்முகராஜக் குருக்கள் தம்பதியினரது. | | மாவிட்டபுரம், விளியவரை அம்மன்கோவில் பிரம்ம ஸ்ரீ அ. கந்தசாமி ஐயர் தம்பதிகளின் புத்திரி. |
| கனிஷ்டகுமாரன் | | சௌபாக்கியவதி |
| பிரம்ம ஸ்ரீ குறிஞ்சிவேந்த சர்மாவுக்கும் | | சந்திரவதனாவுக்கும் |

கொழும்பு பெரிய கொடை ஸ்ரீ பூபாலவிநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் ஸ்ரீ முகவருடம் பங்குனி மாதம் 29 ஆம் திகதி (11 - 04 - 1994) திங்கட்கிழமை கன்னிகாதான மாங்கல்யதாரண பாணிக்கிரகண விவாக வைபவம் மங்களகரமாக நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

மாப்பிள்ளை வீட்டார்.
சோ. சண்முகராஜ குருக்கள் தம்பதிகள்

பெண் வீட்டார்.
பிரம்ம ஸ்ரீ அ. கந்தசாமி ஐயர் தம்பதிகள்
க. அகிலசர்மா (மகன்)
அன்னை விலா,
பிரதான வீதி, சுன்னாகம்.

(7075)


## அதிபர்கள் ஆசிரியர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப் 16

எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி தென்மராட்சி, வேலணைக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும் சென் ஜோன்ஸ் அக்கடமியில் சந்திக்கும்படி வடமராட்சி தென்மராட்சி, வேலணைக் கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ)

## இந்திய-இலங்கை கூட்டு ஆணைக்குழு

புதுடில்லி, ஏப். 16

இந்திய-ஸ்ரீலங்கா கூட்டுக் கமிஷன் புதுடில்லியில் இம்மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் தினேஷ்சிங் இந்தியக் குழுவுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹமீத் இலங்கைக் குழுவுக்கும் தலைமை வகிப்பார்கள். (க)


SHAMROCK
யாழ் சுண்டுக்குளி

A/L 96
PHYSICS
MR. மோகன் B Sc
CHEMISTRY
MR. அன்ரனி B.Sc
ஆரம்பம்: 21-4-94 வியா.

O/L
DAY CLASSES
ஆரம்பமாகியுள்ளன

(30442)



A/L மீட்டல்
சனி - ஞாயிறு
PURE MATHS
APP. MATHS ]—
திரு. கணேசன் (B. Sc)
ஆரம்பம்: 23 - 04 - 1994 சனி

BOND
கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.

[சி-7774]



A/L 96
விஞ்ஞானம்
கணிதம்
வர்த்தகம்
கலைப் பிரிவுகள்
ஆரம்பம்: 23 - 04 - 1994

BOND
கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.

[சி-7775]


# பிரேமா சிலை திறப்பு விழா ஹேமா கலந்து கொள்வாரா?

## ஏப். 30 இல் அவரே அறிவிப்பார்

கொழும்பு, ஏப். 17

எதிர்வரும் மேதினம் அன்று ஹைட்பார்க்கில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிலை திறப்பு விழாவில் தாம் பங்கு பற்றுவதா, இல்லையா என்பதை இம்மாதம் 30ஆம் திகதி தாம் முடிவு செய்ய விருப்பதாக திருமதி ஹேமா பிரேமதாஸா தெரிவித்தார்.

பிரேமதாஸாவின் சிலையை அன்றைய தினம் ஜனாதிபதி விஜேதுங்கா திரை நீக்கம் செய்து வைக்க இருக்கின்றார்.

இதே வேளை —

ஐக்கிய தேசியக் கட்சி மூலம் அரசியலில் பிரவேசிக்கும் படி பிரேமதாஸா குடும்பத்தினருக்கு பகிரங்க அழைப்பு விடுப்பின் அதனை எவரும் எதிர்ப்பர் என்று தாம் நினைக்கவில்லை என்று ஐ. தே. க. பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன கூரே சண்டே டைம்ஸுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

"ஹேமா மீது எனக்குக் கோபமில்லை. கொழும்பு மத்திய தொகுதியில் உள்ள எனது ஆசனத்தை அவருக்கு விட்டுக் கொடுப்பதாக நான் முன்வந்தேன்" — என்றும் திரு கூரே தெரிவித்தார். (எ)

# ஆட்கள் காணாமற்போவது 89க்கு பின்னரே அதிகரிப்பு

## ஜே. ஆர். வெளியிட்ட தகவல்

தென்மாகாணத்தில் ஆட்கள் காணாமற் போன சம்பவங்கள் 1989 ஆம் ஆண்டில் தான் அதிகரித்தது என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

தம்மைச் சந்தித்த தென் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிடம் முன்கண்டவாறு அவர் கூறியதாக "யுக்திய" சிங்கள வார இதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

தமது கூற்றை நிரூபிக்க நாடாளுமன்ற ஹன்சார்ட் அறிக்கைகளை ஜெயவர்த்தனா வாசித்துக் காட்டினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1988 வரை ஆட்கள் காணாமற் போவது குறைவாகத்தான் இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

1988 முடிவுவரை ஜெயவர்த்தனாவே ஜனாதிபதியாக இருந்தார் என்பதும் — 1989 இல் பிரேமதாசா ஜனாதிபதியானார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

# தடைப் பொருள்களை எடுத்துச்சென்ற இரு கான்ஸ்டபிள்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஏப். 17

வடபகுதிக்கு கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்ட பொருள்களை சமூகசேவைகள் அமைச்சின் அனுமதியின்றி கொண்டு செல்ல முயன்ற பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு எதிராக அவசரகாலவிதிகளின் 45 ஆம் பிரிவின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த பாலிப்போடி சிவரட்ணம், ஆறுமுகம் லோகநாதன் ஆகிய இரு கான்ஸ்டபிள்களும் வவுனியா தாண்டிக்குளத்தில் கடமையாற்றிய வேளை (1992 ஆம் ஆண்டில்) தடை செய்யப்பட்ட பொருள்களை வடக்கே கொண்டு செல்ல முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

கற்பூரம் 8 பைக்கெட், மோட்டார் சைக்கிள் பற்றிகள் இரண்டு, மோட்டார் சைக்கிள் காஸ்கெற், ஷொப்பிங்பைகள் 800 ஆகிய தடை செய்யப்பட்ட பொருள்களையே வடக்கே கொண்டு செல்ல முயன்றதாக அவர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துடன் இந்தப் பொருள்களும் தடயப்பொருள்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தர்மதாச ஜெயவிக்கிரம முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. (ஒ 5)


முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

அன்னைபூபதி நினைவுநாள் விழாவை தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் 18-04-94 பிற்பகல் 5-30 மணிக்கு நல்லூர் வீதி முன்றிலில் நடத்தவிருப்பதாலும் 19-04-94 நினைவு நாள் இறுதி நாளானபடியாலும் சகல தனியார் கல்வி நிறுவனங்களையும் 18-04-94 திங்கள், 19-04-94 செவ்வாய் ஆகிய இரு நாட்களும் மூடி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுச் செயலாளர்
யாழ்மாவட்டம்.

(சி 7781)



வேலை வாய்ப்பு

தகுதியுடையவர்களிடம் இருந்து பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I. TRAINEES ACCOUNTS-CLERK

அ. வயது ஆகக் கூடியது 24 ஆண்/பெண் இருபாலாரும்.
ஆ. தகைமை: க. பொ. த (உ/த) சித்தி அத்துடன் க. பொ. த. (சா/த) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
இ. மேலதிக தகைமை: கணக்கியல் துறைசார்ந்த உயர் கல்வி (AAT, NCAT, IAB) பயிற்சியாளரின் தகைமை

2. SALE REPRESENTATIVE
(விற்பனைப் பிரதிநிதி)

அ. வயது: ஆகக் கூடியது 24 ஆண்
ஆ. கல்வித்தகைமை: க. பொ. த. (உ/த) சித்தி, க. பொ. த (சா/த) கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
இ. சுறுசுறுப்பாக செயற்படக் கூடியவராக இருத்தல் வேண்டும். வேதனம் ஊக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கும்.

22-04-1994 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

இயக்குநர்:
TASTE LINE INDUSTRIES (PVT) LTD.
NO 14. SEEINER LANE,
JAFFNA.

(சி/8014)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியாவில் ஆட்சியாளருக்கு சவாலாக மாறிவரும் கெமர்ரூச் கெரில்லாக்கள்!

கம்போடியாவில் கெமர்ரூச் (Khmerrouge) இயக்கத்தின் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகளில் கம்போடிய அரச படைகள் கடந்த மார்ச் நடுப்பகுதியில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி இருந்தன.

இத்தாக்குதலின் போது கெமர்ரூச்சின் ''தலைநகர்'' என்று அழைக்கப்படும் பைலின் (Pailin) என்ற பகுதியை கெமர்ரூச் இயக்கத்தினர் அரசபடைகளிடம் இழந்தனர்.

கம்போடியாவின் 15 வருடகால உள்நாட்டு யுத்தத்தில் பைலின் பகுதியை அரச படைகள் கைப்பற்றியது பெரும் திருப்பம் என்கிறது நொறொடம் ரணறிட் (Norodom Ranariddh) தலைமையிலான கம்போடிய கூட்டரசு.

கம்போடிய அரச கெமர்ரூச் இயக்கத்துக்கு எதிராக சமீபகாலத்தில் நடத்திய இரண்டாவது பெரிய தாக்குதல் இதுவாகும்.

### 1993 மே தேர்தல்

1993 மே மாதம், ஐ.நாவின் மேற்பார்வையின் கீழ், கம்போடியாவில் நடத்தப்பட்ட தேர்தல் மூலம் பதவிக்கு வந்தவர்தான் நொறொடம் ரணறிட். தற்போது கம்போடியாவில் மன்னராக உள்ள நொறொடம் சிஹானூக்கின் (NorodomSihanouk) புதல்வன் இவர்.

**வெளி உலகம்**

1993 மே மாதத் தேர்தலில் நொறொடம் ரணறிட் தலைமையிலான பன்சின்பெக் (Funcinpec) கட்சி 45 சதவீத வாக்குகளையும் —

வியட்நாம் ஆதரவாளரான ஹுன்செனின் (Hunsen) கம்போடிய மக்கள் கட்சி 38 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்தன.

1989 ஆம் ஆண்டு கம்போடியாவில் இருந்து வியட்நாமிய படைகள் வாபஸானபோது கம்போடியாவில் பிரதமராக இருந்தவர்தான் இந்த ஹுன்சென்.

வியட்நாம் படைகள் வாபஸானதை அடுத்து கம்போடியாவில் பெரும் உள்நாட்டு யுத்தம் மூளும் சூழ்நிலை உருவாகியது.

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைகள் வாபஸானபோது நஜிபுல்லா அரசை சோவியத் யூனியன் எப்படிப் பலப்படுத்திவிட்டுச் சென்றிருந்ததோ அதே போன்று வியட்நாம் அரசு ஹுன்சனின் ஆட்சியைப் பலப்படுத்தியிருந்தது.

வியட்நாம்படை வாபஸை அடுத்து ஹுன்சென் அரசைக் கவிழ்ப்பதற்கு கியூ சாம்பன் (Khieu Samphan) தலைமையிலான கெமர்ரூச் இயக்கம் மற்றும் நொறொடம் சிஹானுக் தலைமையிலான இயக்கம் மற்றும் சொன்சான் (Sonsan) தலைமையிலான சிறிய வலதுசாரி இயக்கம் ஆகியவை முஸ்தீபுசெய்து கொண்டிருந்தபோதே இந்தப் பிரச்சினையில் ஐ.நா, தலையிட்டது.

1991இல் பாரிஸில் நடந்த கம்போடிய சமாதான மாநாட்டில் அரசதரப்பு கெமர்ரூச் மற்றும் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

ஆயுதங்களைக் கைவிடவும், கனரக ஆயுதங்களை ஐ.நா.விடம் ஒப்படைக்கவும், தேர்தலில் கலந்துகொள்ளவும் இந்த மாநாட்டில் இணக்கம் காணப்பட்டது.

கெமர்ரூச் இயக்கத் தலைவர் கியூசாம்பனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தார்.

### கெமர்ரூச் மனமாற்றம்

ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்தாகி சில மாதங்களில் கெமர்ரூச்சின் போக்கில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் கம்போடியாவில் இருந்து வியட்நாம் படைகள் முழு அளவில் வாபஸ்பெறவில்லை என்று கெமர்ரூச் குற்றஞ்சாட்டியது — ஹுன்சென் அரசுக்கு ஆதரவாக வியட்நாமிய படைகளில் ஒரு பகுதியினர் சிவில் உடையில் கம்போடியாவில் இன்னும் நிலைகொண்டிருப்பதாக இது தெரிவித்தது.

கம்போடியாவை சட்டபூர்வமாக வியட்நாமிடம் தாரை வார்த்துக் கொடுக்கவே பாரிஸ்ஒப்பந்தம் வழிவகுக்கும் என்றும் கெமர்ரூச் தெரிவித்தது.

ஒப்பந்தத்தின்படி ஆயுதங்களைக் கைவிட மறுத்ததுடன் ஐ நாவின் தேர்தல் பணிகளுக்கும் கெமர்ரூச் முட்டுக்கட்டை போட்டது. தேர்தலில் கலந்துகொள்ளவும் அது மறுத்தது.

எனவே கெமர்ரூச் கலந்துகொள்ளாமலேயே 1993 மே மாதத் தேர்தல் நடைபெற்றது.

ஐ.நா. வரலாற்றில் முன் என்றுமே இல்லாதவாறு சுமார் 22 ஆயிரம் பேர் தேர்தல் பாதுகாப்புக்காகவும், தேர்தல் வேலைகளுக்காகவும் ஐ நா.வினால் அமர்த்தப்பட்டிருந்தனர்.

தேர்தலை நடத்தி முடிக்க சுமார் 200 கோடி டொலர் பணம் ஐ.நாவுக்குச் செலவானது.

தேர்தல் காலங்களில் கெமர்ரூச் இயக்கத்தினர் மறைந்திருந்து நடத்திய தாக்குதல்கள் காரணமாக 21 ஐ நா. சமாதானப்படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

தேர்தலில் கூடுதலான ஆதரவைப் பெற்ற நொறொடம் ரணறிட்டும் அதற்கு அடுத்ததாக வந்த வியட்நாம் ஆதரவு கம்போடிய மக்கள் கட்சித் தலைவர் ஹுன்சென்னும் தமக்கு இடையில் அதிகாரப் பகிர்வை ஏற்படுத்திக் கொண்ட கூட்டாட்சியே தற்போது கம்போடியாவில் நடைபெற்று வருகிறது. சீனாவின் ஆதரவு இந்தக் கூட்டாட்சிக்கு இருந்து வருகிறது.

### கெமர்ரூச் ஆட்சியில் 10 லட்சம பேர் கொலை

கெமர்ரூச் இயக்கம் 1975 ஆம் ஆண்டு முதல் மூன்று வருடங்கள் கம்போடியாவில் ஆட்சி செய்திருந்தது.

1975 ஆம் ஆண்டில் தென் வியட்நாமில் இருந்தும் கம்போடியாவில் இருந்தும் அமெரிக்கப்படைகள் வாபஸான போது தென் வியட்னாமில் அமெரிக்க ஆதரவு நுாயன் வான்தியூ அரசு பதவி கவிழ்ந்தது.

அதே போன்று கம்போடியாவில் பதவியில் இருந்த அமெரிக்க ஆதரவு லொன் நொல் தலைமையிலான அரசும் கவிழ்க்கப்பட்டது.

தென் வியட்நாமை வட வியட்நாம் ஆதரவு வியட்கொங் கெரிலாக்கள் கைப்பற்றினர். இரு வியட்நாம்களும் இணைந்து ஒரே வியட்நாமாகி விட்டன. கம்போடியாவில் கெமரூச் இயக்கமே ஆட்சியைக் கைப்பற்றியது.

1970 ஆம் ஆண்டு நொறொடம் சிஹானூக்கிடம் இருந்து அமெரிக்க ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றிய லொன் நொல் 5 வருடங்களே ஆட்சியில் நீடித்தார்.

இவரது ஆட்சிக்கு கெமர்ரூச் கெரில்லாக்களே பெரும் சவாலாக இருந்தனர்.

சீன ஆயுத உதவியைப் பெற்று அவர்கள் லொன் நொல் அரசை எதிர்த்து வந்தனர்.

1975 இல் கம்போடியாவில் கெமர்ரூச் இயக்கத்தினர் ஆட்சியைக் கைப்பற்றிய பின் பொல் பொட் (Polpot) தலைமையில் கம்போடியாவில் ஆட்சி அமைக்கப்பட்டது.

இவர்களது ஆட்சியில் இடம்பெற்ற படுகொலைகளே 1979 இல் வியட்நாம் படைகளின் தலையீட்டில் முடிவடைந்தது.

## பொல்பொட் கால படுகொலைகளால் தேர்தலில் நிற்க முடியாதநிலை

பொல்பொட்டின் ஆட்சிக் காலம் கம்போடியாவின் இருள் சூழ்ந்த காலமாகக் கருதப்படுகிறது.

மூன்று ஆண்டு காலத்தில் சுமார் 10 இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கெமர்ரூச்சின் தடுப்புக் காவல் முகாம்களில் ஆயிரக்கணக்கானோர் பட்டினியால் இறந்தனர். இன்னும் ஏராளமானோர் சித்திரவதைகளுக்கு உட்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். கம்போடியாவில் வேரூன்றியிருந்த வியட்நாம் ஆதரவுச் சக்திகளை ஒழித்துக்கட்டும் போர்வையிலும் பெரும் அளவில் படுகொலைகள் இடம்பெற்றிருந்தன.

1979 ஆம் ஆண்டில் வியட்நாம் படையினர் கம்போடியாவுக்குள் நுழைந்த போது பெரிய அளவில் எதிர்ப்பு இன்றி கெமர்ரூச் ஆட்சியாளர்கள் காடுகளுக்குள் பின்வாங்கிச் சென்றனர்.

1989 ஆம் ஆண்டு வியட்நாம் படைகள் கம்போடியாவில் இருந்து வாபஸ் பெறும் வரை 10 வருடகாலம் அங்கு உள்நாட்டு யுத்தம் நடைபெற்றது.

வியட்நாம் ஆதரவு அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட இந்த யுத்தத்தில் கெமர்ரூச் இயக்கமே முன்னிலையில் நின்றது.

எனினும் 1975-78 ஆண்டு காலத்தில் நடத்தப்பட்ட படுகொலைகளால் தேர்தலை எதிர்கொள்ள முடியாத நிலை அதற்கு ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. 1993 மே தேர்தலில் அது கலந்து கொள்ளாததற்கு இதுவே பிரதான காரணம் என்று நம்பப்படுகிறது.

### 6 ஆயிரம் போராளிகள்

தற்போது கம்போடியாவின் ரணறிட் — ஹுன்சென் கூட்டரசுக்கு சவாலாக இருந்து வரும் கெமர்ரூச் இயக்கத்தில் 6 ஆயிரம் போராளிகள் மட்டுமே உள்ளனர். முழுநாட்டில் 15சதவீத நிலப்பரப்பு இவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. தாய்லாந்து எல்லைக்கு சமீபமாக உள்ள பகுதிகளிலேயே கெமர்ரூஜ் கெரில்லாக்கள் பெரும் அளவில் நிலை கொண்டுள்ளனர்.

தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள இரத்தினக்கல் வயல்களை இவர்கள் தாய்லாந்து வர்த்தகர்களுக்கு குத்தகைக்குக் கொடுக்கின்றனர். தாய்லாந்து வர்த்தகர்களுடன் பெரும் அளவில் மரவியாபாரமும் செய்து வருகின்றனர்.

இவற்றின் மூலம் கிடைக்கும் பெரும் அளவு பணம் மூலமே கெமர்ரூச் இயக்கத்தினர் தமக்குத் தேவையான ஆயுதங்களை வாங்குகின்றனர். இவர்களது முகாம்களில் மருந்துக்கோ அல்லது உணவு வகைகளுக்கோ எந்த வித தட்டுப்பாடும் இல்லை.

1991 பாரிஸ் சமாதான முயற்சிகளைப் பகிஷ்கரித்து மீண்டும் ஆயுதப் போராட்டத்தில் கெமர்ரூச் இறங்கிய சமயம் சுமார் இரண்டாயிரம் போராளிகள் வரை கெமர்ரூச் இயக்கத்தில் இருந்து விலகிச் சென்றிருந்தனர்.

கடந்த மார்ச் மாத சண்டையில் பைலின் நகரை இழந்துள்ள கெமர்ரூச் இயக்கத்தில் இருந்து மேலும் பல போராளிகள் விலகிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

பைலின் நகரம் பெரும் அளவு இரத்தினக்கல் வயல்களைக் கொண்டது. இதனை இழந்தது மூலம் கெமர்ரூச் இயக்கத்துக்கு பெரும் நிதி நெருக்கடி ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

கெமர்ரூச் இயக்கத்தில் இருந்து விலகி வந்து சரணடையும் கெரில்லாக்களுக்கு

**சஞ்சாரன்**

உணவு, உடை மற்றும் காணிகள் தருவதாக நொறொடம் ரணறிட் அரசு தற்போது அறிவித்துள்ளது.

ஆனால் கெமர்ரூச் கெரில்லாக்கள் இதற்கு இணங்குவார்கள் என்பது சந்தேகமே.

தாய்லாந்து எல்லையில் இயங்கும் கெமர்ரூச் கெரில்லாக்களை தாய்லாந்து அரசின் உதவி இன்றி அடக்குவது இலேசான காரியம் அல்ல.

தற்போதைய கம்போடிய அரசு சீனாவின் ஆதரவை பெற்றுள்ளதால் கெமர்ரூச் இயக்கம் தாய்லாந்தின் உதவியையே நம்பி இருக்க வேண்டிய பெருமளவு நிலையில் இருந்து வருகிறது.

1985 ஆம் ஆண்டில் தலைமைப் பதவியில் இருந்து விலகிக் கொண்ட பொல்பொட் தற்போது தாய்லாந்து எல்லைப் பகுதியில் மறைந்து வாழ்கிறார்.

கெமர்ரூச் இயக்கம் மக்கள் இயக்கமாகத் தலைதூக்குவதற்கு இன்னும் தடையாக இருப்பது பொல்பொட்டின் பெயர் தான்.

*

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# விடுதலைப் போரில் புதிய பரிமாணம் காட்டும் றுவாண்டா 'துட்ஸி' இனப் போராளிகள்

*கறுப்பு இன நாடான றுவாண்டாவில் பெரும்பான்மை இனத்தின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடிவரும் சிறுபான்மையினரான துட்ஸி இன போராளி அமைப்பு இனவிடுதலைப் போராட்டத்தில் புதிய பரிமாணம் ஒன்றைக் காட்டியுள்ளது.*

*''இரத்தம்சிந்தும் கறுப்புமண் றுவாண்டா'' என்ற தலைப்பில் வெரித்தாஸ் வானொலியில் ஒலிபரப்பான ஒரு கண்ணோட்டம் இங்கு கட்டுரை வடிவில் பிரசுரமாகின்றது.*

வறுமையின் கோரத்தில் கறுத்துப் போன ஆபிரிக்காக் கண்டத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள சின்னஞ் சிறிய நாடு றுவாண்டா.

உகாண்டா, தான்ஸானியா, புறூண்டி, செயிர் ஆகிய நாடுகளினால் சூழப்பட்ட மிகச் சிறிய நிலப்பரப்பின் பெயரே றுவாண்டா.

ஆபிரிக்காக் கண்டத்திலேயே மக்கள் அடர்த்தியாக வாழும் நாடாக இது இருக்கிறது. றுவாண்டாவின் நிலப்பரப்பு குறைவு; மக்கள் தொகையோ அதிகம்.

சுமார் 80 லட்சம் மக்களின் தாயகம்தான் இன்று இரத்த ஆறு ஓடும் றுவாண்டா.

உலகில் உள்ள மிகவும் ஏழ்மையான கடைசி 45 நாடுகளில் ஒன்று — றுவாண்டா.

வரட்சி, பசி, பஞ்சம், பட்டினி என ஆபிரிக்கா பெற்றுள்ள கேடயங்கள் றுவாண்டாவிலும் மிக அதிகம் தான்.

1995 ஆம் ஆண்டில் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படும் ஆபிரிக்க வரட்சிக்கு சில ஆயிரம் மக்கள் றுவாண்டிலும் பலியாவார்கள் என்று ஐ.நா. அமைப்பு கணித்துள்ளது.

இப்படி எழுந்து நடமாட முடியாத அளவுக்கு வறுமையில் திண்டாடும் றுவாண்டாவில் தற்போது நடந்து வரும் உள்நாட்டுப் பிரச்சினைதான் என்ன என்ற கேள்வி பிறக்கலாம்.

### இனப்பிரச்சினை

றுவாண்டாவின் இனப்பிரச்சினை ஓரளவு இலங்கையின் இனப்பிரச்சினை போன்றது தான்.

றுவாண்டாவின் சுமார் 80 லட்சம் மக்களில் சுமார் 88 சதவீதமானோர் ஹுத்து (Hutu) எனப்படும் கறுப்பினப் பழங்குடி மக்கள். சுமார் 16 சதவீதமானோர் துட்ஸி (Tutsi) எனப்படும் மற்றொரு கறுப்பினப் பழங்குடி மக்கள்.

துட்ஸி இன மக்கள் எண்ணிக்கையில்தான் குறைவே ஒழிய, நிலப்பிரபுக்கள், செல்வந்தர்கள், வீரம் செறிந்தயர்கள் அரச பரம்பரையினர் ஆவர்.

ஹுத்து என்னும் பெரும்பான்மை இன மக்களோ ஏழை விவசாயிகள் ஆவர்.

எனவே இவ்விரு இனங்களுக்கும் இடையே காலம் காலமாக இருந்து வரும் பகைமை கடந்த பல ஆண்டுகளாக அவ்வப்போது இனக்கலவரமாக வெடித்து வருகிறது.

ஒவ்வொரு முறையும் இனக்கலவரம் வெடிக்கும்போது அதிகமாக உயிரிழப்பது, கொல்லப்படுவது துட்ஸி சிறுபான்மை இன மக்கள் தான். எனவே துட்ஸி மக்களின் எண்ணிக்கை தற்போது இனக்கலவரத்தின் படுகொலையால் வெகுவாகவே குறைந்து விட்டது.

தற்போது றுவாண்டாவில் இனக்கலவரம் வெடித்தது ஏன் என்பதற்கு ஒரு பின்னணி உண்டு.

### பின்னணி

அதாவது — 1880களில் றுவாண்டா ஜேர்மனியின் குடியேற்ற நாடாக இருந்தது. பின்னர் 2ஆம் உலகப் போர் முடிந்து 1962வரை பெல்ஜியம் நாட்டின் குடியேற்ற நாடாக இருந்தது.

பெல்ஜியம் றுவாண்டாவிற்கு சுதந்திரம் வழங்கிய போது, றுவாண்டாவின் ஜனநாயக முறையும் புகுத்தப்பட்டது.

எனவே பெரும்பான்மை இனத்தின் கையில் அதிகாரத்தை மொத்தமாக குவிக்கும் ஐரோப்பிய நாடுகளின் ஜனநாயகம் றுவாண்டாவில் துட்ஸி சிறுபான்மை இன மக்களைத் திருப்திப்படுத்தவில்லை. இதுவே துட்ஸி இனம் [illegible] போரில் [illegible] மாக அமை[illegible]

இந்நிலையில் — 1973 ஆம் ஆண்டில் றுவாண்டா அரசை இராணுவத் தளபதி ஜுவனால் ஹாபியாரிமானா கைப்பற்றி கடந்த பத்தாண்டுகளாக ஆண்டுவந்தார். ஹுத்து இனத்தின் ஜனநாயக அரசு கவிழ்க்கப்பட்டு ஹுத்து இனத்தின் இராணுவ ஆட்சி புகுத்தப்பட்டது.

ஹுத்து இனத்தின் ஜனநாயக ஆட்சியிலேயே உரிமைகள் பறிக்கப்பட்ட துட்ஸி சிறுபான்மை இன மக்கள் ஹுத்து இனத்தின் இராணுவ ஆட்சியின் பல கொடுமைகளுக்கு ஆளானார்கள்.

### போராளி உதயம்

எனவே துட்ஸி இன இளைஞர்கள் றுவாண்டா தேசப் பற்றுப் படை என்ற பெயரில் (R P F) போராளி அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அருகில் உள்ள உகண்டா நாட்டில் போர்ப்பயிற்சி பெற்றுவந்தனர்.

உகண்டா நாட்டின் ஜனாதிபதி யோவேரி துட்ஸி இனப் போராளிகள் மீது அனுதாபம் கொண்டவர். இதனால் துட்ஸி இனப் போராளிகளுக்குப் போர்ப்பயிற்சியுடன் கனரக ஆயுதங்களையும் உகண்டா வழங்கியதாக நம்பப்படுகின்றது.

இவ்வாறு பயிற்சி பெற்ற துட்ஸி இனப் போராளிப் படை 1990 இல் உகாண்டாவில் இருந்து வந்து றுவாண்டாவின் ஜனாதிபதி ஹபியாரிமானாவின் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்தது.

அப்போது றுவாண்டாவின் அரசுப்படையான ஹுத்து இன படைக்கும் துட்ஸி இன போராளிப் படைக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இதில் பலஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

### ஐ.நா படை பிரவேசம்

தமது அரசு கவிழ்ந்து விடுமோ என்று அஞ்சிய இராணுவத் தளபதி ஹாபிரியாமானா ஐ. நாவின் தலை[illegible] அரசுக்கும் துட்ஸி இனப் [illegible] இடையே சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானது. அதன்படி போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க ஐ.நா. சபை 2 ஆயிரத்து 500 வீரர்களைக் கொண்ட ஒரு சர்வதேச அமைதிகாக்கும் படையை அங்கு அனுப்பி வைத்தது. இதுவரையும் ஐ.நா படையும் றுவாண்டாவிலேயே நிலை கொண்டுள்ளது.

### ஏமாற்ற எண்ணிய ஹுத்து இனம்

இவ்வாறு றுவாண்டாவில் அமைதி திரும்பியதால் றுவாண்டாவில் அரசியல் தீர்வை நிரந்தரமாக ஏற்படுத்த கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் தான்ஸானியாவில் வைத்து றுவாண்டா அரசுக்கும் துட்ஸி இனப்போராளி அமைப்புக்கும் இடையே நேரடிச் சமாதான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தானது.

இச்சமாதான ஒப்பந்தப்படி சில அம்சங்களை நாட்டில் நடைமுறைப்படுத்த றுவாண்டா ஜனாதிபதி ஹாபிரியாமானா முன்வந்தாலும்— பல அம்சங்களை நிறைவேற்ற அவர் தயக்கம் காட்டினார்.

றுவாண்டாவின் பக்கத்து நாடான புறூண்டியிலும் பெரும்பான்மை இனமாக உள்ள இதே ஹுத்து (Hutu) இனமக்களுக்கும் சிறுபான்மை இன மக்களுக்கும் இடையே நடக்கும் உள்நாட்டுப் போரினால் உற்சாகம் கொண்ட றுவாண்டா ஜனாதிபதி ஹாபிரியாமானா, துட்ஸி இன மக்களை ஏமாற்றி தமது இராணுவ ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளலாம் என்று இரகசியத் திட்டம் கொண்டிருந்தார் என்று நம்பப்படுகின்றது.

### திட்டம் அம்பலம் மீண்டும் சண்டை

இத்திட்டம் வெளியானதைத் தொடர்ந்து துட்ஸி இனப்போராளிகள் மீண்டும் சண்டையை ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து தான்ஸானியா தலைநகரில் றுவாண்டா, புறூண்டி ஆகிய நாடுகளில் உள்ள ஹுத்து மற்றும் துட்ஸி இனமக்களின் பிரச்சினைகள் குறித்து அவசரம் அவசரமாக ஒரு நாள் மாநாடு கூட்டப்பட்டது.

இம்மாநாட்டில் றுவாண்டா ஜனாதிபதி ஹாபிரியாமானா, ஹுத்து இனத்தைச் சேர்ந்த புறூண்டி ஜனாதிபதி சிப்ரியன் ஆகியோர் கலந்து கொண்டனர். இம்மாநாட்டை முடித்துக் கொண்டு இவர்கள் இருவரும் திரும்பிக் கொண்டிருந்த போது தான் துட்ஸி இனப்போராளிகளின் ரொக்கெட் தாக்குதலுக்கு இவர்கள் பயணம் செய்த விமானம் இலக்காகி நொருங்கி விழுந்தது. இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் அப்போது கொல்லப்பட்டனர்.

இதனால் ஆத்திரம் கொண்ட றுவாண்டா நாட்டின் ஹுத்து இன இராணுவம், றுவாண்டா நாட்டின் பிரதமரான துட்ஸி இனத்தைச் சேர்ந்த அகாதாவைப் படுகொலை செய்தது. அத்துடன் பல்லாயிரக்கணக்கான துட்ஸி இன மக்களையும் கொலை செய்து வருகிறது.

பயந்துபோன பல லட்சக்கணக்கான துட்ஸி இன மக்கள் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால் றுவாண்டாவின் ஹுத்து இனத்தைக் கொண்ட இராணுவத்தில் உள்ள வீரரின் எண்ணிக்கை சுமார் ஆயிரம் பேர் மட்டுமே ஆனால் துட்ஸி சிறுபான்மை இனப் போராளிப் படையில் உள்ள போராளிகளின் எண்ணிக்கை சுமார் 20ஆயிரம் பேர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே தமது போராளிப் படையின் பலத்துடன் றுவாண்டா நகரின் தலைநகர் கிகாலியையே தாம் கைப்பற்றப் போவதாக அறிவித்து முன்னேறி வருகிறார் துட்ஸி இன போராளித் தலைவர் அலெக்ஸ்.

88 சதவீத ஹுத்து இனமக்கள் 11 சதவீத துட்ஸி இனமக்களை ஒடுக்க நினைத்தால் அது நடவாது என்கிறார் அலெக்ஸ்.

றுவாண்டா அரசை துட்ஸி இனம் கைப்பற்றினாலும் கூட றுவாண்டாவில் இரத்தம் சிந்தப்படுவது நிறுத்தப்படுமா என்பதே எஞ்சியிருக்கும் கேள்வியாகும்

★


**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**

**திருமதி நாகரத்தினம் கதிர்காமசாமி**

பிறப்பு: 10 - 12 - 1918
இறப்பு: 21 - 03 - 1994

21 - 03 - 1994 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி நாகரத்தினம் கதிர்காமசாமியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் (20-4-94) புதன்கிழமை எமதுஇல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை வைபவத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'சிதாவாசம்'
சங்கானை.

கு. கதிர்காமசாமியும்
குடும்பத்தினரும்

(30420)



யா/இணுவில் மத்திய கல்லூரி
**பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: 1994-04-30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணி
இடம்: கல்லூரி மண்டபம்
தலைவர்: திரு கா. வைத்தீஸ்வரன்

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1994ஆம் ஆண்டுக்குரிய சந்தாப்பணம் கட்டியவர்களே வாக்களிக்க உரித்துடையவர்கள். சந்தாப் பணத்தை 25-04-94க்கு முன்னர் பொருளாளரிடம் கொடுத்து பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

ஆயுள் சந்தா ரூபா 200/-
ஆண்டுச் சந்தா ரூபா 50/-

கா. வைத்தீஸ்வரன், தலைவர்.
செ. இலதநாதன், செயலாளர்.
க. விசுவலிங்கம், பொருளாளர்.

(30431)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நெல் வயல் விற்பனைக்குண்டு. இளிநொச்சி, D3 எம்மசன்றோட், ஜோன் கவுஸ் அருகாமையில் தொடர்பு கொள்ள வேண்டியது. மே/பா 29, உதயன், சேவை நிலையம், கே. கே. எஸ். றோட், சுன்னாகம். (7071)

C. V. K. 2760 P. S. E. கலர் ரீ. வி. சோனி 27'' பாவனையில் உள்ள றிமூட் கொன்றோல் சிஸ்ரம் கபினற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு. ஆ. தம்பு 69, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு. (7316)

அல்சேஷன் ஆண் நாய் வயது 3½, கறுப்பு மண்ணிறம். சகல தடுப்பு ஊசிகளும் ஏற்றப்பட்டது. விலாசம் திருமதி ஆ. கோபாலசிங்கம், ''புவனகிரி'' சம்பியன் லேன், கொக்குவில். (30434)

அடை வைப்பதற்கு உகந்த நல்ல இன முட்டைகளும், சில்க்கி, பாபடிக்ஸ், நாட்டுக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. பினான்ட் பரடைஸ், இல. 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (30436)

நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள், நல்லின முட்டை இடும் வளர்ப்புக் கோழிகள், குஞ்சுகள், இறைச்சிக்கோழிகள், அடைமுட்டைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. தர்மலிங்கம், 639/1, நாவலர் வீதி, (செட்டித்தெருவுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (7309)

### வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உடுக்கியவளைப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீ முருகன் அரிசி ஆலை, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (7317)

### டைனமோ தேவை

7 K W., 13 K.W. இற்கு இடைப்பட்ட வலுகொண்ட 1500 R .P. M. உடைய 3 பேஸ் டைனமோ தேவை. தொடர்பு: ராஜா கிறீம் ஹவுஸ், இல. 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7310)

### கோல்டன் கொமட்

கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30358)

### பேட்டுக்குஞ்சு விற்பனை

ஹைலைன் பிறவுண் ஒரு மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி', சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30359)

### O/L கணிதம்-94

Distinction, Credit பெறு பேறடைவதற்கு இதுவரையும் சித்தி அடையாதோருக்கும் ஆண்டு 9, 10 உட்படக் கற்பிக்கப்படும். ஆசிரியர் B Sc. இல. 85, சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (30407)

### இலவச ஆலோசனை

லண்டனில் A. C. M. A., Transport, Marketing பட்டங்கள் பெற்றவர் இலவசமாக சேவை மனப்பான்மை அடிப்படையில் தமிழீழத்தில் மேற்படிப்புப் படிக்கும் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூற விரும்புகிறார். ச. கதிரமலைப்பிள்ளை, 15/3, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30272)

### வீடு தேவை

நாவலர் வீதி, கே. கே. எஸ். வீதி, பலாலி வீதிகளுக்கு இடையில் சிறிய குடும்பத்திற்கு அளவான வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு: தா. லோகேஸ்வரன், இல. 3, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. (30435)

### தேவை

வீடு, அனெக்ஸ், வீடு வளவு சிறிய குடும்பத்திற்கு வாடகைக்கு, குத்தகைக்கு, ஒற்றிக்கு யாழ். நகரிலிருந்து பதினைந்து மைல் சுற்றாடலில் தேவை. 2-5-94ஆம் திகதிக்கு முன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல. 630, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (30422)

### பணிப்பெண் தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை. தொடர்பு கொள்ளவும்: சு. இராஜநடேஸ்வரன், இல. 251/3, ஆஸ்பத்திரி வீதி, புதிய உப வீதி, கோணாந்தோட்டம், யாழ்ப்பாணம் அல்லது இஸ்ராலினி நகை மாளிகை, இல 325, கே கே. எஸ். வீதி, முட்டாஸ் கடைச்சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (30439)

---

தாய்மார்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

பளிச்சிடும் வெண்மைக்கு

## றோயல் நீலம்

கடைகளில் விற்பனையாகும் நீலப் பக்கெட்டுகளைப் போல. போலி நீலம் இல்லை யென தமிழீழத்தில் உத்தரவாதத்துடன் விற்பனையாகின்றது

100 ஆடைகளுக்கு ஒரு பக்கெட் போதுமானது. றோயல் நீலம் ஒரு பக்கெட் 6/50 மட்டுமே.

றோயல் இன்டஸ்றிஸ்,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(சி-7694)

---

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றேட். கோண்டாவில்.

## O/L DAY CLASSES

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — திரு. மகேந்திரன் |
| தமிழ், சமயம் | — திரு பண்டிதர் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | — திரு. வேலா |
| ஆங்கிலம் | — திரு. தர்மலிங்கம் |
| வர்த்தகம் | — திரு. நவம் |
| சித்திரம் | — திரு. ரமேஸ் |

### ஆரம்பமாகிவிட்டன

குறிப்பு:
திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 6 நாட்களும் வகுப்புகள் நடைபெறும். முழுப்பாடத்திட்டத்துடன், கடந்த கால வினா-விடையும் நடைபெறும்.

நிர்வாகி.

[சி-7830]

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## கலை, வர்த்தகம்

## 96 EVENING CLASSES

(4-00 — 6-00)
(மாலை வகுப்புகள்)

புதிய வகுப்பு: 21 - 04 - 1994
4.00 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| கணக்கியல் | — திரு. S. K. பிரபாகரன் |
| வர்த்தகம் | — திரு. வரதன் |
| அளவையியல் | — திரு. A. பிரபா |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்து நாகரீகம், இந்து சமயம் | — திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. குணராசா |
| அரசியல் | — திரு. சீலன் |
| வரலாறு | — திரு. சிறீதரன் |

★ மாணவர்களின் நலன் கருதியே இவ் வகுப்பு ஆரம்பமாகின்றது.
★ அனுமதிகள் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

(சி/7770)

---

## யாழ்ப்பாணக் கல்லூரி
## பட்டதாரிப் பிரிவு

யாழ்ப்பாணம்

(1) 1993/94 கல்வியாண்டு பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள்

**G A Q** (கலை முதற் தேர்வு)
தமிழ் மீட்டல்,
(நடந்தேறிய பரீட்சைகளின் வினாக்களுக்கு விடையளித்தல்)
நேரம்: 4-00 — 5-00 (சனி, ஞாயிறு)

(2) **B. A. II** (யாழ்.பல்கலைக்கழகம்)
1. அரசியல் விஞ்ஞானம்
2. இந்து நாகரிகம்
3. மெய்யியல்
4. ஆங்கில இலக்கியம்

மேற்படி வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

(3) **B A. I** (யாழ்.பல்கலைக்கழகம்)
1. அரசியல் விஞ்ஞானம்
2. ஆங்கில இலக்கியம்
3. மெய்யியல

மேற்படி பாடநெறிகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

(4) **G. A. Q** 1994'95 கல்வியாண்டு பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

பாடங்கள்:

| | |
|---|---|
| 1 பொருளியல் | 2 அரசியல் விஞ்ஞானம |
| 3 இலககியம | 4 மெய்யியல |
| 5 இந்துநாகரிகம் | 6 தமிழ் |
| 7 கிறஸ்தவ நாகரிகம் | 8 அடிப்படை ஆங்கிலம் |

விவரங்களுக்கு:

## யாழ்ப்பாணக் கல்லூரி
## வெளிவாரிப் பட்டப்படிப்பு பிரிவு

இல: 464, மருத்துவமனை வீதி.
யாழ்ப்பாணம். (சி-7776)

---

### வட இலங்கை
## தொழில் நுட்பக் கல்லூரி

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE**

ஆரம்பம்:
வார இறுதி நாள் 23-04-1994
வார நாள் 27 04-1994

★ G. W Basic or B B C. Basic
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ திறமையான மாணவர்களுக்கு விசேட பயிற்சிகாலம்
★ புதிய நெறி இனை நிறுவனங்களிலும் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு:

## NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14 St. PETER'S LANE,
JAFFNA.

சிறுப்பிட்டி வடக்கு, உரும்பிராய் தெற்கு,
நீர்வே[illegible] [illegible]
(தலைமையகத்தில் தொடர்பு [illegible])

(சி/8011)

---

# PATRICIAN INSTITUTES

# பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

## தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்

புதிய பிரிவுகள் 20-04-1994 புதன்கிழமை அன்று ஆரம்பமாகின்றன.

### 1. COMPUTER PROCESSING COURSES:

(I) BEGINNER'S COMPUTER STUDIES
★ Introduction to Computers, DOS, Programming in BASIC Language.
DURATION; 4 Months

(II) ADVANCED COMPUTER STUDIES
★ DOS, Programming in BASIC Language, Word Processing, Advanced BASIC
DURATION: 6 Months

(III) DIPLOMA IN COMPUTER STUDIES
★ DOS. Programming in BASIC Language, Word Processing, Systems analysis and Design LOTUS 1-2-3
DURATION: 9 Months

★ Lectures By: **S. R LOGENDRA** (D. C. A.)
(Systems analyst)

★ Equipments used LASER XT/2, XT/3, 386 and BITCOM Computors
(IBM Compatibles), (Theory & Practicals)

### 2. CIVIL DRAUGHTSMEN SHIP AND QUANTITY SURVEYING

★ QUALIFICATION; G. C. E. (O/L) DURATION: 6 Months

### 3. CITY AND GUILDS OF LONDON EXAM (YEAR 94/95)

★ QUANTITY SURVEYING (PART - I & II)
★ QUALIFICATION; G C E. (O/L) DURATION: 9 Months
★ Lectures By: **MR S. RUTHIRALINGAM**
(Chartered Civil Engineer)

### 4. ENGLISH CLASSES

மிகக் குறுகிய கால பயிற்சிகள் நடைபெறும்
DURATION: 4 Months

### 5. TOFEL (Test Of English as a Foreign Language)

DURATION; 4 Months

### 6. SHORT HAND AND TYPING (English)

### 7. GENERAL MOTOR MECHANISM

மோட்டார் வாகனங்கள் திருத்துதல் (மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் பம்பி, ஜெனரேற்றர், கார், லொறி எஞ்சின்கள்) (பெற்றோல், டீசல் யாவும்)

★ PETROL ENGINE:
Ignition System Operation Maintenence and Care Engine Over haul and time setting

★ DIESEL ENGINE:
(Fuel injector system, design and Operational details)

அத்துடன் மோட்டார் வாகனங்களின் மின்சார உபகரணங்களைப் பழுது பார்த்தலும, மின்னேற்றலும், மின்சார இணைப்பும்

★ LECTURES BY: **MR. A S. GUNASEELAN**
(Automobile Engineer)
DURATION: 6 Months

### 8. ELECTRICAL WIRING மின்சார இணைப்பு

★ வீட்டு மின்சார இணைப்பு
★ தொழிற்சாலை மின்சார இணைப்பு
(Single phase & Three phase)
DURATION: 3 Months

### 9. MOTOR REWINDING மோட்டர் றீவைண்டிங்

★ அடிப்படை மின்னியல் காந்தம, ஆமேசசர், மின்மாற்றிகள் (Single phase Motor and Fan, Three phase
DURATION; 4 Months

### 10. GENERAL ELECTRICIAN ஜெனரல் எலக்ரீசியன்

★ அடிப்படை மின்னியல் (நேரோட்டம், ஆடலோட்டம்)
★ அடிப்படை இலத்திரனியல்
★ நேரோட்ட மின்னியந்திரங்கள். ஆடலோட்ட மின்னியந்திரங்கள் (பழுதுபார்த்தல், ரீவைண்டிங்)
★ வீட்டு மின்சுற்று. வாகனங்களுக்கான மின்சுற்று (அமைத்தல், பழுதுபார்த்தல், பாதுகாத்தல்)
★ THREE PHASE (மோட்டார் மின்பிறப்பாக்கிகள்)
★ குளிர்சாதனப் பெட்டி, காற்றுச் சீராக்கி (A C) மற்றும் பலவகையான மின்சார உபகரணங்களைப் பற்றி அறிதலும், அவற்றை பழுதுபார்க்கும் முறையும்
DURATION: 6 Months

குறிப்புகள்:
- அனைத்து வகுப்புகளும் வார நாள், வார இறுதி நாள் வகுப்புகளாக நடைபெறும்.
- பயிற்சிக் கட்டணங்களை தவணை அடிப்படையில் செலுத்தலாம்.
- விண்ணப்பப் படிவங்களையும், பாடநெறிகளுக்கான கட்டண விவரம், மற்றும் பாடத் திட்டங்களையும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு!

பதிவாளர்,
பற்றீஷன் உயர் கல்வி நிறுவனம்
59, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR,
Patrician Institute of Higher Studies,
59. St. Patrick's Road,
JAFFNA.

[சி-7779]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு இப்போதைக்கு இல்லை; பானையில் இல்லாமல் அகப்பையில் வருவதுஎப்படி?

தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும், சிங்கள மக்களும், உலகமும் சமாதானத்தை விரும்புகிறார்கள். சிங்கள ஆட்சிபீடம் தான் சமாதானத்தை விரும்பவில்லை.

மாறி மாறி, மண்கிண்டி மலை, கிளாலி, பூநகரி ஆகிய இடங்களில் அரச படைகளுக்கு ஏற்பட்ட படுதோல்விகள், இராணுவ இழப்புகள், தென்மாகாணத்தில் ஏற்பட்ட தோல்வி ஆகியவற்றாலேயே சிங்கள ஆட்சிபீடம் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கிறது.

யுத்தத்திலும், சமாதானத்திலும் புலிகள் சமமான நிலையில் இருக்கிறார்கள். பேச்சுக்கும் சமாதானத்துக்கும் விடுதலைப்புலிகள் தயார் என்பதை உலகம் நிராகரிக்க முடியாது.

இந்தக் கருத்துக்களை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இம்மாதம் ஒன்பதாம் திகதி நடைபெற்ற தமிழீழ பொதுக்கல்வித் தேர்வுப் பரிசளிப்புவிழாவில் பேசியபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் எங்கே, எந்தளவில் நிற்கிறது என்பதனை மேற்கண்ட மூன்று பத்திகளும் முத்தாக விளக்குகின்றன. உண்மையான தள நிலையும் அதுவே.

தமிழர் விவகாரத்தில், எந்தத் தீர்வும் சிங்களவர்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்பதே தெற்குத் தலைவர்களின் குறிக்கோளாக எப்போதும் இருந்து வருகிறது. அதனால் தான் தமிழர்களின் இராணுவபலம் வலுவாகவும், சக்தி மிக்கதாகவும் இருக்கும்போது, பேச்சுவார்த்தைக்கோ அல்லது தீர்வு ஒன்றை முன்வைக்கவோ அவர்கள் விரும்புவதில்லை; முன்வருவதும் இல்லை.

தென்னிலங்கையில் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் — பின்னணியில் — விஜேதுங்கா அரசாங்கம் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தை எதனையும் நடத்துவதில் ஆர்வம் காட்டமாட்டாது என்பதனை நிச்சயமாகச் சொல்லலாம்

ஜனாதிபதி விஜேதுங்காவின் பதவிக் காலம் இந்த வருடம் டிசம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. அதனால் எப்படியும் நவம்பர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தலுடன் ஒரே நாளில் நாடாளுமன்ற தேர்தலும் நடத்தப்படலாம் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஒத்த கருத்துடன் இருக்கின்றன.

நாடாளுமன்றத்தை ஒக்டோபரில் கலைத்துவிட்டு டிசம்பர்மாத மத்தியில் நாடாளுமன்றத் தேர்தலையும், அதன் பின்னர் ஜனவரியில் ஜனாதிபதி தேர்தலையும் நடத்தும் திட்டம் ஒன்றும் இருக்கிறதாம்.

எதுவோ, நாட்டின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் இரண்டு பிரதான தேர்தல்கள் நடைபெறுவதற்கு இன்னமும் ஏழு மாதங்கள் மட்டுமே இடைவெளி உண்டு.

## தேர்தலில் வெல்வதிலேயே தெற்கு அரசியல் தலைவர்கள் நாட்டம்

அதனால் ஆளும்கட்சியும் சரி, எதிரணிக்கட்சிகளும் சரி, தேர்தல்களைப் பற்றியும், அவற்றில் வெல்வது குறித்தும், ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றுவது பற்றியுமே தமது முழுச் சிந்தனையையும் செலுத்தி வருகின்றன. இரு சாராரும் இப்போதே போட்டா போட்டியுடன் செயற்படத் தொடங்கிவிட்டனர்.

**இரண்டாம் பட்சமானவை**

அதனால் தமிழர் பிரச்சினை— அதற்கான தீர்வு, யுத்தத்தை நிறுத்துதல்— அழிவுகளைத் தவிர்த்தல் ஆகிய இரண்டு விடயங்களும் இப்போது அவர்களைப் பொறுத்தமட்டில் இரண்டாம் பட்சமானவையாகவே ஆகிவிட்டன.

சபாநாயகர் முஹம்மதுவின் யாழ்ப்பாண விடயம் இறுதி நேரத்தில் தடுக்கப்பட்டதற்கு தமிழர் விவகாரத்தை இப்போது தொடுவதற்கு அரசாங்கம் விரும்பாமையே பிரதான காரணம்.

சபாநாயகர் தாம் எப்படியும் யாழ்ப்பாணம் வரவேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்று விடாப்பிடியாக நிற்பதற்கு உள்ளார்ந்த காரணம் ஒன்று உண்டு. தமிழர் - முஸ்லிம்கள் தகராற்றைத் தீர்த்து, 1987ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழர்களும் முஸ்லிம்களும் சகோதரர்கள் போல வாழ்ந்த நிலையை வடக்கிலும் கிழக்கிலும் உருவாக்க வேண்டும் என்ற பெருவிருப்பம் தனிப்பட்ட ரீதியில் சபாநாயகருக்கு உண்டாம்.

அவரது விருப்பம் நிறைவேறும் பட்சத்தில், தமிழர்களும் முஸ்லிம்களும் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளும் பட்சத்தில், அது சிங்களவருக்குப் பாதகமாகிவிடும் என்பதை மணந்து பிடித்தே விஜேதுங்கா, சபாநாயகரின் பயணத்தைத் தடுத்ததாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழர்களுடன் பகைமை பாராட்டிச் சிங்களவர் பக்கம் போய்ச் சேர்வதால், கிழக்கில் தாம்வாழும் மண்ணில் பெரும்பகுதியை சிங்களவரிடம் பறிகொடுக்க நேரிடும் என்ற அச்ச உணர்வு பொதுவாகவே, முஸ்லிம்களையும் அவர்களின் தலைவர்களையும் பலமாகப் பற்றிக்கொண்டுள்ளது. வடக்கு - கிழக்கு ஒன்றாகவே இருக்கவேண்டும் என்ற கருத்தோட்டமும் இப்போது அவர்களிடம் மெல்லியதாகத் தெரிகிறது.

**உலகத்துக்கு 'புலுமாசு'**

இதற்கிடையில் பேச்சுவார்த்தையில் அக்கறை இருப்பதாகவும், அரசியல் தீர்வில் விருப்பம் இருப்பதாகவும் ஐக்கிய தேசியக்கட்சி அரசு கடந்த நான்கு வருடங்களாக உலகத்துக்குப் ''புலுமாசு'' காட்டி வருகிறது. ஆனால் பிரச்சினைக்குரிய சொந்தத் தீர்வு எதுவும் அதனிடம் இல்லை. ஓர் எழுத்துத் தானும் இல்லை.

அதனால் தான் யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ணப் பயணம் மேற்கொண்ட ஆங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோ, கத்தோலிக்க அதிமேற்றிராணியார் அதி. வண. மார்க்கஸ் பெர்னாண்டோ மற்றும் மெதடிஸ்த மத குருமார், சர்வோதய ஆரியரத்னா ஆகியோரின் சமாதான முயற்சிகள் தோல்வி கண்டதாக அவர்களுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுடன் பேசிய மதகுருமார், புலிகள் சார்பாக முன்வைக்கும் கோரிக்கை அல்லது நிலைப்பாடு குறித்து அரசு ஏதாவது பதிலைக் கூறவேண்டும். அதற்கான பதில் அரசிடம் இல்லை என்பதாலேயே விஜேதுங்கா யாழ்ப்பாணம் வந்து செல்வோரை மரியாதையின் நிமித்தமேனும் சந்திக்கக்கூட தயங்குகிறார்! பின்னடிக்கிறார் என்று அவ்வட்டாரங்கள் கவலையுடன் தெரிவித்தன.

சபாநாயகர் முஹம்மது, அமைச்சர் தொண்டமான் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருப்பினும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு இப்படியிருக்கிறதே, அதற்கு உங்கள் தரப்பு பதில் என்ன என்று கேட்டால் விஜேதுங்கா எதனைச் சொல்வது? பானையில் இருந்தால் தானே அகப்பையில் வருவதற்கு ...!

அரசியல்

**அரிசி தேடும் எதிரணி**

அரச தரப்பு மட்டும் தான் இந்த நிலையில் என்பதல்ல. எதிரணியிடமும் தமிழர் பிரச்சினைக்குத் திட்டவட்டமான தீர்வு எதுவும் இல்லை எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக நிற்பார் என எதிர்பார்க்கப்படும் சந்திரிகா குமாரணதுங்கா, தென்மாகாணத் தேர்தல் முடிந்த பின்னர் கூறியதை நினைவுபடுத்திக் கொள்வது பொருத்தமானது.

நாம் ஆட்சிக்கு வந்தால் வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்த அனைத்து முயற்சிகளையும் செய்வோம்—என்று கூறினாரேயன்றி, பிரச்சினைக்குத் தம்வசம் என்ன தீர்வு உண்டென்பதைச் சொல்லவில்லை.

நிச்சயமாக அவர்கள் தரப்பும் இனித்தான் தீர்வு ஒன்று குறித்துச் சிந்திக்க வேண்டி இருக்கிறது. அவர்களும் பானையில் இடுவதற்கு இனித்தான் அரிசி தேடிச் செல்ல இருக்கின்றனர்!

ஆனால் அதற்கு முன்னர் கிழக்கில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் ஆதரவை — வாக்குகளை— திரட்டுவதற்கு சுதந்திரக்கட்சி விசேட உப குழு ஒன்றை கே. பி. இரத்நாயக்கா தலைமையில் நியமித்துள்ளது.

இனப் பிரச்சினைக்கு என்ன தீர்வென்று கூறாமல் முதலில் வாக்கை வாங்கிக்கொண்டு பின்னர் ''வால்'' காட்டும் திட்டம் இது!

★ ★ ★

தமிழர் விவகாரம், வடக்கு-கிழக்கு யுத்தம் ஆகியவற்றுக்கும் பிரச்சினைகளை இரண்டாம்பட்சமாகத் துக்கித்தள்ளி விட்டு தேர்தல்களையே சிந்தையிற் கொண்டு தென்னிலங்கை அரசியல் கட்சிகள் செயற்பட்டு வந்தாலும் அவற்றுக்குள் (உட்கட்சிப் பூசல்கள் வலுத்து வருகின்றன.

ஆளும் கட்சிக்குள் வெடிப்புகளும், பிளவுகளும் நாளுக்கு ஒரு வடிவம் எடுத்து வருகின்றன!

பிந்திய தகவல்களின்படி பிரேமதாசா ஆதரவாளர்களின் எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது காமினியை ஓர் அமைச்சராகவும், கட்சியின் செயலாளராகவும் விஜேதுங்கா திட்டமிட்டுச் செயற்படுவதாகத் தெரிய வந்துள்ளது. அவரோடு றொனி டி மெல், காமினி [illegible] விக்கிரம விரசூரியா, சரத் அமுனுகம ஆகியோரையும் உள்ளே ''அழைத்து வந்து'' தனக்கென ஒரு தனிப்பாசறையையே அணி திரட்ட விஜேதுங்கா முழு மூச்சாகச் செயற்படுகிறார். காமினியை எம்.பி யாக்குவதற்கு தேசியப்பட்டியல் உறுப்பினர் எம். எவ். ஆமின் இடம் விட்டுக் கொடுக்கவுள்ளார், அதற்குப் பிரதியுபகாரமாக ஆமினுக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவியாம்.

எதிர்வரும் மே 6ஆம் திகதி ஜனாதிபதி சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கிறார். அந்த வேளை தமக்கு எதிராக எதுவும் நடக்காமல் அரண் கட்டுவதற்கு அவரது தனிப்படை அமர்த்திச் செல்வராம். அதன் பொருட்டு அமைச்சரவையில் மே முதல் வாரத்தில் பெரிய மாற்றம் வரும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இப்போதுள்ள விஜேதுங்கா, ரணில் அணிகளுடன் மூன்றாம் அணி ஒன்றும் ஐ.தே கட்சிக்குள் முளைக்கும் சாத்தியம் நிறையவும் தெரிகிறது. பிரேமதாசா குடும்ப அணியே அந்த மூன்றாவது அணி. அடுத்த மாதத்தில் அது உதயமாகும் போது இப்போதுள்ள இரண்டு அணிகளையும் சேர்ந்த பலர் அதில் தொற்றிக் கொள்வார்கள்.

அப்போது நடக்கும் குத்து வெட்டில் மூன்று அணிகளில் எது தலையெடுத்து நிற்கும் என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இந்த விலகல் முறை (Knock out) போட்டியில் விஜே குழுவே முதலில் சாயும் என்று பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

இதனைத் தெரிந்து கொண்டும் தொண்டமான் விஜேதுங்காவுடன் மீண்டும் ஒட்டப்போய் நிற்பது வயதுக் கோளாறோ என்று மலையக வட்டாரங்களில் கேட்கப்படுகிறது.

உட்கட்சிப் பூசல் ஆளும் கட்சியுடன் மட்டும் நிற்கவில்லை, பொது மக்கள் ஐக்கிய முன்னணியிலும் பல முரண்பாடுகள் முளைத்துள்ளன.

பொ. ம. ஐ முன்னணி திறந்த பொருளாதாரக் கொள்கையை மறுவடிவமைத்துக் கைக்கொள்ளும் என்று சந்திரிகா கூறியதற்கு முன்னணிக்குள் பலத்த எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன அந்த நிலைப்பாட்டுக்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. பொ. ம. ஐ. முன்னணியின் வெற்றிக்குப் பின்னால் நின்ற ''ஜனதா மித்ரோ'' (மக்களின் தோழன்) அணி சந்திரிக்காவின் அந்த நிலைப்பாட்டை வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஜே. வி. பி. சந்தேக நபர்கள் எனக் கருதப்பட்டு, பூசாவில் தடுத்துவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களின் அணியே ''ஜனதா மித்ரோ.''

மேலும் தென் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர்

**உதயகாந்தன்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவிய பூசல்கள் முற்றாகத் தணியவில்லை; புகைத்துக்கொண்டிருக்கின்றன!

தென்னிலங்கை அரசியல்வாதிகளின் உட்கட்சி மோதல்கள் நின்று தேர்தல் போர் முடியும்வரை வடக்கு-கிழக்குப் போர் தொடரவே செய்யும். முடிவு எதுவும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது எப்படி? வேண்டுமானால் தமிழர் வாக்குகளை அள்ளுவதற்காக தேர்தல் சாகசங்களை காட்டுவார்கள். அவற்றை ரசிக்கும் நிலையிலா தமிழர்கள் வாழ்கிறார்கள்? ★

> பேச்சுவார்த்தையில் அக்கறை இருப்பதாகவும்; அரசியல் தீர்வில் விருப்பம் உள்ளதாகவும் ஐக்கிய தேசியக்கட்சி அரசு கடந்த நான்கு வருடங்களாக உலகத்துக்கு "புலுமாசு" காட்டி வருகிறது, ஆனால் பிரச்சினைக்குரிய சொந்தத் தீர்வு எதுவும் அதனிடம் இல்லை; ஓர் எழுத்துத்தானும் இல்லை!

> பொ.ம.ஐ. முன்னணி திறந்தபொருளாதாரக் கொள்கையை மறுவடிவமைத்துக் கைக்கொள்ளும் என்று சந்திரிகா கூறியதற்கு முன்னணிக்குள் பலத்த எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

> ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நடக்கும் குத்து வெட்டில் மூன்று அணிகளில் எது தலையெடுத்து நிற்கும் என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும், இந்த விலகல் முறை (KNOCK OUT) போட்டியில் விஜே குழுவே முதலில் சாயும் என்று பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## நாட்டரிசியும் நாட்டுப் பற்றும்

தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு சிங்களப் பேரினவாத அரசு பல்வேறு அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. அதில் ஒன்று தான் தமிழர் தாயகம் மீதான பொருளாதாரத் தடை.

சிங்கள அரசின் பொருளாதாரத் தடை நடவடிக்கைக்குப் பணிந்து போகாமல் அதனைமுறியடித்து நிமிர்ந்து நிற்கும் போதுதான் தமிழர் விடுதலைப் போராட்டம் மேலும் முனைப்படைய முடியும்.

அந்த வகையில் பொருளாதாரத் தடையை முறியடிக்க தமிழர் தாயகத்தின் பொருளாதாரம்— பொருண்மியம் — கட்டியெழுப்பப்படவேண்டும்.

பொருளாதாரம் நேர்சீராக கட்டியெழுப்பப்படும் போது அங்கு உற்பத்தியாளனின் விற்பனை விலைக்கும் நுகர்வோனின் கொள்வனவு விலைக்கும் இடையில் அதிக வேறுபாடு இருக்கக் கூடாது.

அதனை வேறு விதமாகக் கூறுவதாயின் உற்பத்தியாளன், நுகர்வோன் இருவருக்கும் இடையில் நிற்கும் தரகர் அல்லது வியாபாரி அநியாயமான முறையில் லாபம் சம்பாதிக்க — உற்பத்தியாளனும் நுகர்வோனும் அந்தரிக்க — இடமளிக்கக் கூடாது.

உற்பத்தியாளனுக்கு நியாயமான விற்பனைவிலை கிடைக்கவேண்டும்; நுகர்வோனும் நியாயமான விலையில் பொருளைக் கொள்வனவு செய்யவேண்டும். அதுவும் எமது மண்ணில் எமக்குத் தேவையான அளவுபொருளை நாம் உற்பத்தி செய்யும் போது — குறிப்பாக எமது அன்றாட அத்தியாவசிய உணவுப் பொருளை நாம் உற்பத்தி செய்யும் போது— அதனை உற்பத்தியாளன் நியாய விலைக்கு விற்கும் போது — இடையில் வரும் வியாபாரி கொள்ளை லாபம் ஈட்டும் நோக்கில் விலையை உயர்த்தி பாவனையாளர் பாதிப்புற அனுமதிக்கக் கூடாது.

இதனைக் கருத்தில் கொண்டு தான் நாட்டரிசியைக் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யும் ட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது; அது தொடர்பான விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்த விதிமுறைகளின் கீழ் —

நெல் சாகுபடி செய்வோரிடமிருந்து நியாயவிலைக்கு— சமுகமவை விட உச்ச விலைக்கு — அது கொள்வனவு செய்யப்படுகின்றது.

அது போல சமுகமவை விட குறைந்த விலைக்கு — நியாய விலைக்கு — ஆகக் கூடிய சில்லறை விலை 29 ரூபா 50 சதம் என்ற கணக்கில் — நாட்டரிசி மக்களுக்கு விற்கப்படுகிறது.

நல்நோக்குடன் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்தை முறியடிக்கும் வகையில் சில வர்த்தகர்கள் — மேற்படி ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படாமல் — எழுந்தமான விலைக்கு அரிசியை விற்று வருவதை தமிழீழக் காவல் துறையினர் கையும் மெய்யுமாகப் பிடித்திருப்பதாக அறியவருகிறது.

இவ்வாறு அரிசி வர்த்தகத்தில் மட்டுமன்றி, ஏனைய பல பாவனைப் பொருள்களையும் வாணிபர்களில் சிலர் இரண்டு பக்கங்களையும் சுரண்டி கொள்ளை லாபம் அடிக்கிறார்கள்.

இவ்வாறு நடந்து கொள்வது தமிழர் சமூகத்தின் வளர்ச்சிக்கு, வாழ்வுக்குவிரோதமானதாகும். மக்கள் தமது விடுதலைக்காகப் போராடும் போது அதே சமகாலத்தில் புதிய நாட்டுக்கான கட்டுமானங்கள் நடந்து கொண்டிருக்கும் போது, சுரண்டல்— கொள்ளை லாபம் — சகிக்க முடியாதது; தவறானது என்பதனை அவர்கள் புரிந்து கொண்டு தாமாகத் திருந்த வேண்டும்.

வெறும் பணம் சம்பாதிப்பதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் சமூக பிரக்ஞையுள்ள பிரஜைகளாக— நாட்டுப்பற்று மிக்கவர்களாக — செயற்பட வேண்டும். என்பதை அவர்களுக்கு உணர்த்துவது ஒவ்வொரு மக்களினதும் கடமை.

## பேரின்ப வாழ்வுக்கு உதவும் மனம், வாக்கு, காயம்

எல்லா நதிகளும் கடலிலிருந்து தான் உண்டாகின்றன. கடல் நீர் மேகமாக மாறி பிறகு மழையாகப் பெய்து, அது நதியாகிறது.

கடலில் இருந்து வந்த நதிகள் மீண்டும் கடலை நோக்கிச் செல்லுகின்றன வழியில் ஏதாவது தடை ஏற்பட்டால், அதாவது சிறு பாறைகள் தடுத்தால் அவற்றை உடைத்துக் கொண்டு செல்லுகின்றன பெரிய மலைகள் தடுத்தால் அவற்றைச் சுற்றி வளைந்த செல்லுகின்றன.

எப்படியாவது அவை கடலை அடைந்தாக வேண்டும்! கடைசியில் கடலை அடைந்ததும் நதி தன் பெயரை இழந்து அதுவும் கடலோடு கடலாகி விடுகிறது.

சீவன்களுடைய நிலையும் இது தான்.

பிரம்மத்தில் இருந்ததோன்றும் சீவன்கள் மீண்டும் பிரம்மத்தை அடைய முயற்சிக்கின்றன. எத்தனையோ பிறவிகள் பிறந்து பிறந்து, இணைந்து கடைசியில் பிரம்மத்தை அடைகின்றன.

ஒரு சமயம் ராமதீர்த்தரை ஒருவர் கேட்டார். ''ஏன் மனிதன் பணம் பதவி புகழ் இவற்றையே திரும்பத் தேடி அலைகின்றான்?

அதற்கு ராமதீர்த்தர் — ''பிரம்மம் என்ற பேரின்பத்தில் இருந்து வந்த சீவன் மீண்டும் பேரின்பத்தைத் தேடுகின்றான உலகப்பொருள்கள் இன்பம் கொடுப்பதால் அவற்றின் பின்னால் செல்கின்றான் ஆனால் அந்த இன்பம் அவனுக்குத் திருப்தி அளிப்பதில்லை அதனால் இன்னும் இன்பம் வேண்டும் என்று அந்தப் பொருள்களையே மீண்டும் மீண்டும் நாடுகின்றான் பேரின்பம் கிடைக்கும் வரையில் அவன் இப்படித் தான் இருப்பான்'' என்கிறார்.

பேரின்பத்தை அடைய மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் மனிதன் பாடுபடவேண்டும்.

ஞானயோகம் மனதைத் தூய்மைப்படுத்துகிறது.

பக்தியோகம் வாக்கைத் தூய்மைப்படுத்துகின்றது.

கர்மயோகம் காயத்தைத் தூய்மைப்படுத்துகின்றது.

'வாசனை'களால் ஆனவன் தான் மனிதன். கர்மயோகம் வாசனைகளைக் குறைக்கின்றது. பக்தியோகம் வாசனைகளைச் [illegible]றது. ஞானயோகம் வாசனைகளை மாற்[illegible].

—ஏ. பார்த்தசாரதி.

## புலிகளின் குரல் வானொலியில்

17-04-1994
ஞாயிறு இரவு

★ 8-01 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — ''தியாகத்தீயில் அன்னை பூபதி''
★ 8 10 — இசையரங்கம் நிகழ்ச்சியில் பாடுபவர்- திரு பெரியதம்பி
★ 8.30 — செய்திகள்
★ 8 40 — தொடர் நாடகம் இலங்கை மண் 22 ஆம் அங்கம்.

18-04-1994
திங்கள் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''பெண் இனத்தின் ஒளி விளக்கு''
★ 7.25 — மணி ஆரம்
★ [illegible]
★ 7-50 — [illegible]
★ 7-55 — தாயகப் பாடல்

## வன்னியிலும் வதிவிட வேளாண்மை பேட்டி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களாக யாழ் மாவட்டத்தில் நடத்தி வந்த வதிவிட வேளாண்மைப் போட்டியை இவ்வருடம் முதல் வன்னி மாவட்டத்திற்கும் விஸ்தரித்துள்ளது

வதிவிடங்களைச் சுற்றிய இடங்களில் மரக்கறிகள், கிழங்குவகைகள், தானியங்கள் ஆகியவற்றை பயிரிடுவதுடன் பழமரங்கள், பயன்தரு மரங்கள் ஆகியவற்றை நடுகை செய்வதும் ஆடு, கோழி போன்ற கால்நடைகளை வளர்த்துவரும் எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

போட்டிக்காக மட்டுமல்ல வதிவிடங்களை சுற்றிய இடங்களை பயிர்ச்செய்கை விலங்கு வளர்ப்பு மூலம் பயன்படுத்தும் ஒருவர் தனது உணவுத் தேவைக்குப் போதுமான காய்கறிகளை, தானியங்களை, முட்டைகளை, பாலை இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்

சத்துணவு கிடைப்பதுடன் வருமானம் கிடைப்பதும் சிறந்த பயனுள்ள பொழுது போக்காக இருப்பதும் குறிப்பிடக்கூடியதாகும்

ஆர்வமுடையவர்கள் உங்கள் பகுதி மாவட்டத்தொடர்பாளரிடமும் உற்பத்திக் குழுக்களிடமும் விவசாய போதனாசிரியர்களிடமும் சமநல சேவை நிலையங்களிடமும் அரசு சார்பற்ற நிறுவனங்களிடமும் மேலதிக விபரங்களைப் பெற்று போட்டியில் பங்கு பற்றி பயனடையுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது. (ஓ)

**ஆண்டு'**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேனவிரத்தினாவும்—

மூன்றாவது படையணிக்கு கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் [illegible] விஜேரட்னாவும் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் சிரேஷ்ட படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-ஐ)

## அறிமுகவிழா

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய ஆதரவில் ''இறைவா உன்னைத்தான்'' எனும் தலைப்பில் திரு. த. மனோகரன் ஆக்கிய பக்திப் பாக்கள் நூலின் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

## சிற்றூர்திச் சங்க சிரமதானம்

அன்னை பூபதி நினைவாக யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையம் யாழ் மாவட்ட முச்சக்கர மோட்டார் வண்டி சேவைச் சங்கம், யாழ். மாவட்ட இரு சில்லு மோட்டார் வண்டி சேவைச் சங்கம், யாழ். வின்லர் படமாளிகைச் சந்தியில் அமைந்துள்ள பொதி சுமக்கும் வாகன சேவைச் சங்கம், புலோப்பளை பொதி சுமக்கும் வாகன சேவைச் சங்கம் ஆகியன இன்று இடம் துப்புரவாக்கல், சிறந்த பதுங்குகுழிகள் அமைத்தல் முதலிய சிரமதான வேலைகளில் ஈடுபடும். [•]

**கே ம யில்**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பக்கக் காங்கேசன்துறையில் தரித்து நிற்கின்றன

நேற்றுடன் சோமாலி விருந்து பொருள்கள் இறக்கி முடிக்கப்பட்டுவிடும் எனவும்—

இறக்கும் பணி முடிவடைந்தால் உடனடியாக சோமாலி கப்பல் கொழும்பு திரும்பும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

வெளியூர்களுக்கு எடுத்துச் செல்வதற்காக ஒரு தொகுதி தபால் பொதிகள் இக்கப்பலில் ஏற்கனவே ஏற்றப்பட்டுள்ளன. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

நேற்றுப் பின்னேரம் 6 00 மணிக்கும் 7.00 மணிக்கும் இடையில் சரசாலைக்கும் — கப்புதூவு (பருத்தித்துறை வீதி) க்கும் இடையில் ரூபா 20,000 பணத்துடன் எனது டயறியும், கடைக்கணக்குக் கொப்பியும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

அ. இம்மானுவேல்
(சாள்ஸ் ஒலி, ஒளி)

மீசாலை தெற்கு,
மீசாலை. (30449)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி பரிமளம்

காரைநகர் தங்கோடையில் வசித்தவரும் தற்போது செல்லமுத்து வீதி மானிப்பாயில் வசிப்பவருமாகிய காலஞ்சென்ற இளையதம்பியின் மனைவி பரிமளம் அவர்கள் 15-04-94இல் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் தகனக்கிரியைகள் அன்றைய தினம் [15-04-94] நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்
வா. மங்கை
(மகள்)

(7319)

### நல்லதம்பி பாலசுப்பிரமணியம்

காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த நல்லதம்பி பாலசுப்பிரமணியம் 14-4-94 கனடாவில் காலமானார்.

இவர் காலஞ் சென்ற க. நல்லதம்பி (இளைப்பாறிய ஆசிரியர்), வள்ளியம்மையின் அன்பு மகனும், விக்னராஜா, சிவராஜா, விநாயகராஜா (குப்பு), விஜயராணி, கிருஷ்ணவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயலலிதா, சுகுணாவதி ஆகியோரின் அருமை மாமனாரும் காலஞ் சென்ற சிவசம்பு, காலஞ் சென்ற சந்திரசேகரம், நாகம்மா, கணேசன் (உரிமையாளர், சிறீ கணேசா ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், வர்ணகுலசிங்கம் (இளைப்பாறிய சிறாப்பர், இந்தியன் வங்கி , பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 18 – 04 – 1994 கனடா, ரொறன்டோ நகரில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நல்லதம்பி கணேசன்
(சகோதரர்)
695, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆயிலி,
காரைநகர். (30448)

### வேலுப்பிள்ளை கந்தசாமி

(சமாதான நீதிவான் ஓய்வுபெற்ற ஆசிரியர், சிற்பக் கலைஞர்)

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமி 16 – 4 – 94 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் விஜயராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசிங்கநாயகம், சரஸ்வதியம்மா, காலஞ்சென்ற கனகரட்ணம் அன்னலட்சுமி, வே. ஐயாத்துரை (பொறியியலாளர் லண்டன்), வே. செல்வநாயகம் (பரந்தன்), இராசகிளி றஞ்சிதகமலானந்தம், காலஞ்சென்ற சிவநாதன் புனிதபுஷ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தோ. கலைமதி, த. கலைமொழி, க. கலைஎழில், உ. கலையரசி, க. முரளி ஆகியோரின் அன்புத் தந்தையும், கு. தோத்திரலிங்கம் (அதிபர்), மு. தனபாலசிங்கம் (அரசினர் வைத்தியசாலை கொட்டைக்காடு), க. உமைபாலன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், அ. கந்தசாமி, அ. கனகதம்பிராசா, அ. இராசகோபால், அ. சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற க. சிவநாதன் ஆகியோரின் மைத்துனரும், தோ. லோகதர்சன், தோ. டினேஸ், தோ. யுகானி, த. ஜெயந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை பி. ப. 3 00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
க. விஜயராணி (மனைவி)
க. முரளி (மகன்)

(30440)

### செல்வி அநுராதா சுப்பிரமணியம்

கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொட்டாஞ்சேனை அ. த. பா. ஆசிரியையுமான அநுராதா சுப்பிரமணியம் 14 - 04 - 94 இல் கொழும்பில் காலமானார்.

இவர் கருகப்பலை காலஞ்சென்ற மூத்ததம்பி சுப்பிரமணியம் (முன்னாள் சங்கர் காட்வெயர்ஸ் உரிமையாளர்), இரகசம்பா ஆகியோரின் அன்பு மகளும், சிவசங்கரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சரஸ்வதி வயிரவப்பிள்ளை, பன்னாலை இராசரத்தினம், அன்னப்பிள்ளையின் அன்பு மருமகளும், கிளிநொச்சி சதாசிவம் மகேஸ்வரி, க. தங்கப்பிள்ளையின் அன்புப் பெறாமகளும் ஆவார்

இறுதிக் கிரியைகள் 16 – 4 – 94 அன்று கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
பொ. இராசரத்தினம்
(மாமன்)

பளாலி றோட்,
உரும்பிராய் வடக்கு (30444)

### வயித்திலிங்கம் அருளானந்தம்

(முன்னாள் தபால் தந்தி பரிசோதகர்)

காரைநகர் அல்லின் வீதியைச் சேர்ந்தவரும் கொழும்பில வசித்து வந்தவருமான அருளானந்தம் 15 - 4 – 94 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளின் மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, முருகேசு, திருநாவுக்கரசு மற்றும் இராசம்மா ஆகியோரின் சகோதரரும், செல்வச்சந்திரன் (நோர்வே-பிரான்ஸ்), செல்வராணி, செல்வராசா (இந்திரன்-ஜேர்மனி), செல்வகுமாரி (ஜேர்மனி), செல்வநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சியாமளா (பிரான்ஸ்), ஜெகசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16 - 4 - 94 கொழும்பில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. செல்லம்மா (சிந்தாமணி)
(மருமகன்)

"[illegible]த்திர வாசம்"
கோணாமலை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (30450)

## மூத்த மாலுமி காலமானார்

வல்வெட்டித்துறை, ஏப். 17

ஈழத்தமிழரின் புகழ்பெற்ற மூத்த கப்பல் மாலுமியான ஐயாத்துரை இரத்தினசபாபதி தமது 85 ஆவது வயதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

1938 ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவுக்கு பாய்மரக் கப்பலை ஓட்டிச்சென்ற ஐந்து மாலுமிகளில் இவரும் ஒருவராவார். ஏனைய நான்கு பேரும் இவருக்கு முன்னர் ஏற்கனவே காலமாகிவிட்டனர்.

மூத்த மாலுமி இரத்தினசபாபதியின் மரணத்தையொட்டி வல்வெட்டித்துறையில் வெள்ளிக்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் தமது கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டு அனுதாபம் தெரிவித்தன.

வல்வையில் கடந்த வருடம் நடைபெற்ற விழா ஒன்றில் இவருக்கு "கப்பலோட்டிய மன்னன்" என்ற பட்டம் அளிக்கப்பட்டிருந்தது.

(அ-155)

அன்னை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்றில்.

★ கோப்பாய் — உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கு.

★ உடுவில், தெல்லிப்பளை — சுன்னாகம் முருகமூர்த்தி கோவில்.

சண்டிலிப்பாய் — நவாலி வடக்கு. சோலைவை பிள்ளையார் கோவில்.

★ சங்கானை — சுழிபுரம் வடக்கம்பரை அம்மன் கோவிலில்.

★ யாழ்ப்பாணம் — அத்தியடிப் பிள்ளையார் கோவில்.

★ தீவகம் — நாவற்குழி வைனிதா குடியிருப்பு, தெற்பேலி பண்டிதர் குடியிருப்பு.

★ கைதடி — கைதடி — நாவற்குழி முருகன் கோவிலடி.

★ சாவகச்சேரி — மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் ச.ச. நிலையம்.

★ கொடிகாமம் — கச்சாய் அம்மன் கோவில்.

★ பளை — இத்தாவில் பாடசாலை.

★ பருத்தித்துறை — புலோலி தென் மேற்கு காந்தியூர் ச.ச நிலையம்.

★ கரவெட்டி — கட்டைவேலி நுணுவில் பிள்ளையார் கோவில்.

★ உடுப்பிட்டி — இலக்கணாவத்தை மேஜர் கோபு ச,ச, நிலையம்.

அடையாள உண்ணாவிரதம் நடைபெறும் இடங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் கருத்துரை வழங்குவர்

[இ-5]

உல்லாசப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசியில் தொடர்பு கொண்டு இந்த ஆண்டுத் தொடக்கத்தில் நகர் மத்தியில் 10 பேரின் உயிர்களை பலி கொண்ட வெடிகுண்டு வெடிப்புச் சம்பவத்துக்கும் —

சென்றவாரம் உல்லாசப் பயணிகள் விடுதிகளில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்கும் — தாமே பொறுப்பு எனக் கூறினார்.

இப்போது பி. பி. ஸிக்கும் யு என் ஐ நிறுவனத்துக்கும் எல்லாளன் படை அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

சென்ற வாரத் தாக்குதல்கள் ஓர் எச்சரிக்கை என்றும், இனிமேல் வெளிநாட்டுப் பயணிகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் கொல்லப்படுவார்கள் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

யாரும் அறியாத அந்தக் குழு புலிப்படையினருக்கு ஒரு போர்வை எனப் பாதுகாப்புப் படையினர் கருதுகின்றனர்

இப்படிப்பட்ட தாக்குதல்களுக்கான உத்திகளும், வித்தகமும் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமே இருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறுவார்.

நாட்டில் உள்ள இரப் போருக்கு முடிவுகட்ட எடுக்கப்படும் முயற்சிகள் ஜனாதிபதி விஜேதுங்கா விடுதலைப் புலிகளை எதிராக ஏற்கக் கடுமையாகப் போக்கினால் தடைபட்டு நிற்பது போல் இருக்கும் இவ் வேளையில் —

உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வரவேண்டாம் எனக் கூறும் — எச்சரிக்கும் — அறிக்கை விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. — என்று அவர் மேலும் தெரிவித்தார்

[அ-5]

# 2 ஆயிரத்து 856 மெற். தொன் நெல்

# விளைச்சல் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 17

1993/94 காலபோகத்தில் யாழ். மாவட்டத்தில் பெய்த கடும் மழையினால் 2 ஆயிரத்து 420 ஹெக்டர் நெல் வயல்கள் அழிந்து நாசமடைந்துள்ளன. இதனால் மாவட்டத்தின் மொத்த சராசரி உற்பத்தியாக கணிப்பிடப்பட்டுள்ள 14 ஆயிரத்து 206 மெற்றிக் தொன்னில் 2 ஆயிரத்து 856 மெற்றிக் தொன் விளைவு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி காலபோகத்தில் கூடிய மழைவீழ்ச்சி பரவலாக கிடைத்த காரணத்தினால் நெற்பயிர்கள் நல்ல நிலையில் இருந்தும் எதிர்பார்த்த விளைவைப் பெறமுடியாது போனதாகவும் —

இருந்தும் முன்னைய ஆண்டுகளை விட இந்த ஆண்டு மாவட்டத்தில் சராசரி விளைவு ஏக்கருக்கு 40 புசலாக அதிகரித்திருப்பதாகவும் யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

[த-162)

யாழ் மாவட்டத்திலுள்ள

## பிரதேச செயலகங்களுக்கு 5லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு அலுவல்கள் மாகாண அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பியுள்ள 2-3-94 திகதியிடப்பட்ட சுற்றறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காகவே ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-17)

## இன்று

சண்டிலிப்பாய் இரட்டைப்புலம் ஞானவயிரவர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10-30மணிக்கு பெரியபுராண விழா ஆரம்பமாகி நடைபெறும் [ச]

★ ★ ★

ஆ.மி. வித்தியாலய ஆசிரியை திருமதி ஆ. சேனாதிராசாவின் சேவை நலம் பாராட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு கில்வரி ஒழுங்கையில் இயங்கும் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். [த]

★ ★ ★

சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளராகவும் செயலாளராகவும் பணி புரிந்து ஓய்வுபெற்ற திரு த. நவரத்தினராசாவின் சேவை நலனைப் பாராட்டி சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்தால் நடத்தப்படும் பாராட்டு விழா இன்று ஞாயிறு காலை 9மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத் தலைவர் திரு. இ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

[க-31]

## பாராட்டும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஏப்- 17

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையினர் நடத்தும் 24 ஆவது வருடவிழா நிகழ்ச்சிகளும் —

ஜி சி ஈ 1992, 93 ஆவணி பரீட்சைகளில் தோற்றி 260 புள்ளிகளுக்கு மேல் பெற்று பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற தகுதியுடைய காரைநகர் மாணவர்களை பாராட்டி பரிசளிக்கு வைபவமும் —

இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். (த)

இவ்வாண்டுக்கான அபிவிருத்தி

## விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய்

தமிழர் புனர்வாழ்வுக்கழக விவசாயசேவை பளைப் பிரிவினர் மேட்டு நிலப் பயிர் செய்கைக்கென விவசாயிகளுக்கு நாற்பது லீற்றர் மண்ணெண்ணை வீதம் கட்டுப்பாட்டு விலையில் வழங்கிவருகின்றனர். (க-117)

## மீன்கறி உண்ட மூவர் சுகவீனம்

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

வல்வெட்டித்துறை ஏப் 17

மீன் கறி சமைத்து சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வல்வெட்டித்துறையில் இச் சம்பவம் இடம்பெற்றது.

எஸ். தர்மலிங்கம் (வயது 44) த. அன்ரன், (வயது 2) யோ. நீட்ராம்மா (வயது 43) ஆகியோரே இம்மூவரும் ஆவர்.

வல்வை மீன் சந்தையில் பாவனைக்கு உதவாத "பேத்தை" மீனை வாங்கி இவர்கள் கறி சமைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

செப்டம்பர்மாத

## மாணவருக்கான உணவுமுத்திரை

### புதன்கிழமை விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான செப்டம்பர் மாத உணவு முத்திரைக்கான உணவுப்பொருள் விநியோகம் பலநோ, கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

பாடசாலைகளின் வகுப்பு ஆசிரியர்கள் நாளை திங்கட்கிழமை மு.ப, 10 மணிக்கு அதிபரைச் சந்தித்து உணவு முத்திரை விநியோகத்தை உறுதிப்படுத்தும் படியும் —

ஆண்டு 2 தொடக்கம் 13 ஆண்டு மாணவர்கள் 20 ஆம் திகதி புதன்கிழமை 9மணிக்கு பாடசாலைகளுக்குச் சென்று உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளும்படியும் கல்விக் கோட்டங்களின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(இ)

## கல்வி ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்,

யாழ்ப்பாணம், ஏப். 17

முறைசாராக் கல்விக்கு சேவைக் கால கல்வி ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் —

விண்ணப்பங்களை மாவட்ட கல்வி பணிப்பாளர் ஊடாக யாழ். கல்வி அலுவலகத்துக்கு அனுப்பினால் அவற்றை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —யாழ் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது,

(த-3]

## வெங்காயம் விலை உயர்வு

யாப்பாணம், ஏப், 17

யாழ்ப்பாணத்தில் என்றும் இல்லாதவாறு வெங்காயத்தின் விலை உயர்ந்துள்ளது.

தற்போது ஒரு கிலோ வெங்காயத்தின் விலை 65 ரூபா முதல் 70 ரூபா வரை சந்தையில் உயர்ந்துள்ளது

சென்ற வருடம் இறுதியில் பெய்த கடும் மழையினால் பெருமளவு வெங்காயம் அழுகி நாசமடைந்ததே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப் படுகிறது.

(இ-162]

## ஓய்வூதிய கொடுப்பனவுகள் 500 ரூபாவால் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 17

சகல ஓய்வூதியர்களுக்கும் அவர்களது தற்போதைய குறைக்கப்படாத ஓய்வூதியத்தில் ஆகக்குறைந்த பட்சம் 500 ரூபா கூடுதலாக வழங்கப்படவுள்ளது என்று வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனத்தின் செயலாளர் திரு. பி. எல், திருச்செல்வம் தெரிவித்தார்.

காலா காலமாக ஓய்வூதியர்களுக்கு ஏற்பட்டு வந்த ஏற்றத்தாழ்வுகளின் முரண்பாடுகள் குறித்து ஆராய அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் சிபாரிசை யடுத்து இந்த உயர்வு வழங்கப்பட விருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆகக்குறைந்த பட்சம் 500 ரூபா அல்லது 45 வீதத்தில் இருந்து 75 வீதம் வரை, இதில் எத்தொகை கூடியதோ அத்தொகை ஓய்வூதியர்களுக்கு கிடைக்கவிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்,

(த-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் டொனால்ட் ருபார்ட்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று மோதும் அணிகள் வருமாறு:-

★ ஷ்டறா எதிர் வீனஸ் வி[illegible] (இ)

★ ★ ★

[illegible] பிரதேச செயலக

விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெறும் 9ஒவர்களைக் கொண்ட 11 பேர் பங்கு பற்றும் அணிகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் நாளை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

(த-143)

## அன்னை பூபதி நினைவாக உண்ணாவிரதம்

தென்மராட்சி, ஏப். 17

அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவாக பளை வட்டவைப் பிரிவில் உள்ள மக்களும் பளை வர்த்தகர் சங்கமும் இணைந்து நடத்தும் உண்ணாவிரதம் இன்றும், நாளையும் பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலயத்திற்கு அருகில் உள்ள நினைவுப் பந்தலில் நடைபெறும்.

[க-117]

## ஆசிரியர் சேவைக்கால பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 17

1994 முதலாம் தவணைக்கான ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சித் தொடரில் மரவேலை, உலோகவேலை, நெசவு, வரைதல், மோட்டார் பொறித் தொழில், வானொலி பேணல் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால வகுப்புகள் இன்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை — காலை 8 30 மணி முதல் மாலை 4.30 மணி வரை— சுன்னாகத்தினம் மணியில் நடைபெறும் [ச]

## ஆலயங்களில்

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் [illegible] சுதர்சன சக்கர வழிபாடும் ஸ்ரீ இராமானுஜர் ஜெயந்தியும் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

[ச]

## ஞானசம்பந்தர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 17

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பத்து நாட்களுக்கு திருஞானசம்பந்தர் உற்சவம் நடைபெற உள்ளது. உற்சவ நிகழ்ச்சிகள் நாளாந்தம் பி. ப. 5மணிக்கு ஆரம்பமாகும். அதற்கு முன்னதாக பி. ப 3 மணி தொடக்கம் திருமுறை முற்றோதல் இடம்பெறும். (அ)

## சிறிமாவோவுக்கு 78 வயது

கொழும்பு, ஏப். 17

சுதந்திரக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குஇன்று 78 ஆவது பிறந்ததினமாகும்.

(இ-எ-6)


## அச்சுக்கோப்பாளர்கள்

முன் அனுபவம் உள்ள அச்சுக்கோப்பாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கல்வி மற்றும் தொழில் சான்றுப் பத்திரங்களுடன் இன்றும், நாளையும்காலை 10 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடையில் நேரில் வரவும்; சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்,

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகப்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) [illegible] 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17 - 04 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org